





admin@dhinakani.com

RNI-TNTAM/2023/88253

# நமது தினகனி

NAMADHU DHINA KANI

www.dhinakani.com

காலை நாளிதழ்








Vol: 03 | Issue: 7 | 4 Pages | 7.8.2025 | Thursday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825

லர்: 03 | இதழ்: 7 | 4 பக்கங்கள் | 7.8.2025 | வியாழக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825




**ஐயுணர் வெய்தியக் கண்ணும் பயமின்றே**

**மெய்யுணர் வில்லா தவர்க்கு**

**விளக்கம்:**

**மெய்யுணர்வு இல்லாதவர்க்கு ஐந்து புலன்களின் வேறுபாட்டால் வளர்ந்த ஐந்து வகை உணர்வும் முற்றப்பெற்ற போதிலும் பயன் இல்லை.**

## ரெப்போ ரேட் விகிதத்தில் மாற்றமில்லை ரிசர்வ் வங்கி



புதுடெல்லி, ஆக. 7

இந்திய ரிசர்வ் வங்கி தனது நாணய கொள்கை குழு (MPC) ஆகஸ்ட் 4 அன்று தொடங்கிய கூட்டத்தின்முக்கியமுடிவுகளை இன்று ஆர்பிஐ கவர்னர் சஞ்சய் மல்ஹோத்ரா வெளியிட்டார். பலரின்கணிப்புகளைபோலவே இக்கூட்டத்தில் ஆர்பிஐ தனது ரெப்போ விகிதத்தில் எவ்விதமான மாற்றமும் இல்லாமல் அறிவித்துள்ளது.

காலாண்டு ஆலோசனைக் கூட்டத்திற்குப் பின் ஆர்பிஐ கவர்னர் சஞ்சய் மல்ஹோத்ரா செய்தியாளர் சந்திப்பில் கூறியதாவது:

வங்கிகளுக்கு ரிசர்வ் வங்கி அளிக்கும் குறுகிய கால கடனுக்கான வட்டி விகிதத்தில் மாற்றம் ஏதுமில்லை. வங்கிகள் தரும் வீட்டுக்கடன் மற்றும் வாகனக் கடன்களில் மாற்றம் ஏற்பட வாய்ப்பு இல்லை. ரெப்போ ரேட் விகிதம் 5.5சதவீதம் ஆகவே தொடரும். இந்த ஆண்டு பிப்ரவரி முதல் சில்லறை பணவீக்கம் 4 சதவீதத்திற்கும் குறைவாகவே உள்ளது.பிப்ரவரி முதல் 3 முறையாக ரெப்போ வட்டி விகிதம் 1 சதவீதம் குறைக்கப்பட்டு உள்ளது. இந்திய பொருளாதாரம் வலுவாக உள்ளது. என்றார்.

## உத்தரகாண்ட் மேக வெடிப்பு: கேரள சுற்றுலா பயணிகள் 28 பேர் மாயம்



உத்தரகாசி, ஆக. 7

உத்தரகாண்ட்மாநிலம்உத்தரகாசி மாவட்டத்தில் தராலி என்ற மலைக்கிராமம் உள்ளது. முக்கிய ஆன்மிக தலமான கங்கோத்ரி செல்லும் வழியில் அமைந்துள்ள இந்த கிராமம் கடல் மட்டத்தில் இருந்து 648 மீட்டர் உயரத்தில் அமைந்துள்ளது. பக்தர்கள், சுற்றுலாப் பயணிகள் அதிகம் வந்து செல்லும் தராலி கிராமத்தில் ஏராளமான ஓட்டல்கள், தங்கும் விடுதிகள் உள்ளன.

இந்நிலையில் நேற்று அங்கு திடீரென மேக வெடிப்பு ஏற்பட்டது. அதாவது, அதிகன மழை கொட்டித் தீர்த்தது. வானத்தில் இருந்து அருவி கொட்டுவதைப் போல் பெய்த மழை காரணமாக கீர் கங்கா ஆற்றில் பேரழிவு தரும் பெரு வெள்ளம் ஏற்பட்டது. திடீரென ஏற்பட்ட இந்த பெரு வெள்ளம், தராலி மலைக்கிராமத்துக்குள் புகுந்தது. மலைப்பகுதிகளில் இருந்து வந்த பெரு வெள்ளம், அங்கிருந்த கட்டிடங்களை வாரி சுருட்டியபடி ஓடியது.

திடீரெனவந்த வெள்ளத்தில்சிக்கி 5 பேர்பலியானார்கள், பலர்வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டனர். பலர் மாயம் ஆகியுள்ளதால் மீட்பு பணிகள் முழு வீச்சில் நடைபெற்று வருகின்றன. இதற்கிடையே, கேரளாவைச் சேர்ந்த 28 சுற்றுலாப் பயணிகள் மாயமாகியுள்ளனர் என்ற தகவல் வெளியாகியுள்ளது. உத்தரகாண்டிற்கு சுற்றுலா சென்ற கேரள குழுவைச் சேர்ந்தவர்கள் நேற்று காலை 8.30 மணியளவில் உத்தரகாசி செல்வதாக புறப்பட்டுச் சென்றனர்.

ஆனால் அவர்களை அதன்பிறகு தொடர்பு கொள்ள முடியவில்லை என்று உறவினர் ஒருவர் கூறியுள்ளார். ஹரித்வாரைச் சேர்ந்த டிராவல் ஏஜென்சி வாயிலாக அவர்கள் பயணித்ததாகவும், டிராவல் ஏஜென்சியாலும் அவர்கள் இருக்கும் இடத்தை கண்டறிய முடியவில்லை என்றும் தகவல் வெளியாகியுள்ளது. இதனால் கேரள சுற்றுலாப் பயணிகளின் கதி என்ன என்று தெரியாததால் தேடுதல் பணி தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

## அவதூறு வழக்கு: ராகுல்காந்திக்கு நிபந்தனை ஜாமீன்



ராஞ்சி, ஆக. 7

மத்திய உள்துறை மந்திரி அமித் ஷாவுக்கு எதிரான அவதூறான கருத்துக்கள் தெரிவித்தாக தொடரப்பட்ட வழக்கில் காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி ஜார்க்கண்டின் சாய்பாசாவில் உள்ள எம்பிஎம்எல்ஏ சிறப்பு நீதிமன்றத்தில் ஆஜரானார். அவருக்கு நீதிமன்றம் நிபந்தனை ஜாமீன் வழங்கியது. மேலும் விசாரணைக்கு முழு ஒத்துழைப்பு வழங்கவும் நீதிமன்றம் கூறியது. ராஞ்சியில் உள்ள சர்க்யூட் ஹவுஸில் இருந்து ராகுல் காந்தி வந்தடைந்த நீதிமன்றத்திலும், அதைச் சுற்றியும் பாதுகாப்பு போடப்பட்டது.

ஜூன் 26 ஆம் தேதி நேரில் ஆஜராகுமாறு உத்தரவிட்ட சிறப்பு நீதிமன்றத்தின் உத்தரவை எதிர்த்து, ஜூன் 2 ஆம் தேதி ஜார்க்கண்ட் ஐகோர்ட்டில் ராகுல்காந்தி மனுத் தாக்கல் செய்தார். ஜூன் 10ஆம் தேதி ராகுல்காந்தி நீதிமன்றம் குறிப்பிட்ட நாளில் ஆஜராக முடியாது என்று காங்கிரஸ் எம்பியின் வழக்கறிஞர் ஐகோர்ட்டில் தெரிவித்திருந்தார். அதற்குப் பதிலாக ஆகஸ்ட் 6ஆம் தேதியை வழங்குமாறு கோரினார். ஐகோர்ட்டு அவரது கோரிக்கையை ஏற்றது.

2018 ஆம் ஆண்டு சாய்பாசாவில் நடந்த ஒரு பேரணியில் மத்திய உள்துறை மந்திரி அமித் ஷாவுக்கு எதிராக அவதூறான கருத்துக்களைத் தெரிவித்ததாக பிரதாப் குமார் என்பவர் ராகுல்காந்தி மீது அவதூறு வழக்கு தொடர்ந்தார். சாய்பாசாவில் உள்ள கோர்ட்டில் குமார் தாக்கல் செய்த மனுவில், ராகுல் காந்தியின் அறிக்கைகள் அவதூறானவை என்றும் அமித்ஷாவின் அந்தஸ்துக்கு களங்கம் விளைவிக்கும் வகையில் வேண்டுமென்றே கூறப்பட்டவை என்றும் குற்றம் சாட்டினார்.

முன்னதாக, மக்களவையின் எதிர்க்கட்சித் தலைவரான காந்தி, மூத்த பழங்குடியினத் தலைவரும் முன்னாள் முதல்வருமான சிபு சோரனின் இறுதிச் சடங்கில் கலந்துகொள்ள செவ்வாய்க்கிழமை ஜார்க்கண்ட் வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# இந்தியாவிலேயே இரட்டை இலக்க வளர்ச்சி விகிதத்தை எட்டிய திராவிட மாடல் அரசு: மு.க.ஸ்டாலின் பெருமிதம்

சென்னை, ஆக. 7

முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில்,

இந்தியாவிலேயே இரட்டை இலக்க வளர்ச்சி விகிதத்தை எட்டிக் காட்டியுள்ள ஒரே அரசு தமிழ்நாட்டின் திராவிட மாடல் அரசு. இந்தியாவிலேயே அதிகபட்சமாக 9.69% பொருளாதார வளர்ச்சியுடன் தமிழ்நாடு முதலிடம் என்று கூறி வந்தோம் அல்லவா... அதையும் தாண்டி, தமிழ்நாட்டின் வளர்ச்சி விகிதம் 11.19% என மத்திய அரசின் திருத்தப்பட்ட மதிப்பீட்டில் வெளியாகியுள்ளது!

இதற்கு முன்பு, இரட்டை இலக்க வளர்ச்சி எட்டப்பட்டது 201011ஆம் ஆண்டில். அப்போது கலைஞர் ஆட்சி. இப்போது கலைஞர் வழி நடக்கும் திராவிட மாடல் ஆட்சி! இரண்டுமே கழக ஆட்சி.



2030ஆம் ஆண்டுக்குள் 1 டிரில்லியன் டாலர் பொருளாதாரம் என்றபோது பலரது புருவமும் உயர்ந்தது.

இது மிக உயர்ந்த இலக்கு, எப்படி சாத்தியமாகும்? என்றார்கள்! இதே வேகத்தில் சென்றால், எதுவும் சாத்தியம் என்பது இப்போது மெய்ப்பிக்கப்பட்டுவிட்டது. என பதிவிட்டுள்ளார்..

## உங்களுடன் ஸ்டாலின் முகாம்; 74 ஆயிரம் பேர் விண்ணப்பம்

கோவை

'உங்களுடன் ஸ்டாலின்' சிறப்பு முகாம் கடந்த ஜூலை, 15ம் தேதி முதல் நடந்து வருகிறது. இதில், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை உட்பட, 13 துறைகளின் சார்பில், 43 சேவைகள் வழங்கப்படுகின்றன.

கோவை மாநகராட்சியில் வார்டுகள் ரீதியாக முகாம்கள்நடத்தப்படுகின்றன. நேற்று வடக்கு மண்டலம், 13வது வார்டு, வெள்ளக்கிணறு



ஆதி திருமண மண்டபத்தில் முகாம் நடந்தது.

இதில், மகளிர் உரிமைத்தொகை வேண்டி, பெண்கள் திரளானோர் விண்ணப்பித்தனர்.

பட்டா, பட்டா மாறுதல் உள்ளிட்ட தேவைகளுக்காக, 1,500க்கும் மேற்பட்டோர் விண்ணப்பித்துள்ளனர். ஜூலை 15 முதல் நேற்று வரை நடந்த, 35க்கும் மேற்பட்ட முகாம்களில், 74 ஆயிரத்து, 606 பேர் விண்ணப்பித்துள்ளனர். தெற்கு மண்டலம், 97, 100வது வார்டுகளுக்கு பொள்ளாச்சி ரோட்டில் உள்ள ஹேமாம்பிகா திருமண மண்டபத்தில் முகாம் நடக்கிறது.

## கோவை, திருப்பூர் மாவட்டங்களில் 13 போலீஸ் ஸ்டேஷன்கள் தரம் உயர்வு

பொள்ளாச்சி

கோவை, திருப்பூர் மாவட்டத்தில், எஸ்.ஐ., தலைமையில்செயல்பட்டபோலீஸ்ஸ்டேஷன்கள், இன்ஸ்பெக்டர்தலைமையிலானபோலீஸ் ஸ்டேஷன்களாக தரம் உயர்த்தப்பட்டுள்ளன.

தமிழகத்தில், போலீஸ் ஸ்டேஷன்கள், இன்ஸ்பெக்டர் மற்றும் எஸ்.ஐ., கட்டுப்பாட்டில் செயல்பட்டு வருகின்றன.

அதில், எஸ்.ஐ., கட்டுப்பாட்டில் உள்ள போலீஸ் ஸ்டேஷன்கள், மற்றொரு போலீஸ் இன்ஸ்பெக்டர் கீழ் செயல்பட்டு வந்தது.

சட்டம் ஒழுங்கு பராமரிப்பு, அவசர நிலைகளை கையாளும் வகையில், போலீஸ் ஸ்டேஷன்கள் தரம் உயர்த்த வேண்டும் என கோரிக்கை இருந்தது. இந்நிலையில், தமிழக முதல்வர் ஸ்டாலின், கடந்த ஏப்., மாதம் நடந்த சட்டசபை கூட்டத்தொடரில் போலீஸ் மானிய கோரிக்கையின் போது, 110வது விதியின் கீழ், எஸ்.ஐ., தலைமையிலான போலீஸ் ஸ்டேஷன்கள், இன்ஸ்பெக்டர் தலைமையிலான ஸ்டேஷன்களாக தரம் உயர்த்தப்படும் என அறிவித்தார். அதன்படி, 280 போலீஸ் இன்ஸ்பெக்டர் பணியிடங்கள் கூடுதலாக உருவாக்கப்பட்டு, எஸ்.ஐ., தலைமையிலான போலீஸ் ஸ்டேஷன்கள், இன்ஸ்பெக்டர்தலைமையிலானபோலீஸ் ஸ்டேஷன்களாக தரம் உயர்த்தப்பட்டு அரசாணை வெளியிடப்பட்டது.

கோவை மாவட்டத்தில், தடாகம், கே.ஜி., சாவடி, காருண்யாநகர், செட்டிபாளையம் போலீஸ் ஸ்டேஷன்கள்; கோட்டூர், சுல்தான்பேட்டை, மகாலிங்கபுரம், வடக்கிப்பாளையம் போலீஸ் ஸ்டேஷன்கள்தரம் உயர்த்தப்பட்டுள்ளன. திருப்பூர் மாவட்டத்தில், கணியூர், அமராவதிநகர், செய்யூர், கொமரலிங்கம், உதியூர் உள்ளிட்ட போலீஸ் ஸ்டேஷன்கள் தரம் உயர்த்தப்பட்டுள்ளன.

## பழங்குடியின மக்களுக்கு ரேஷன் கார்டு குடுத்தாச்சு! இருப்பிடத்துக்கே சென்று வினியோகம்

கோவை

கோவையில் உள்ள ஐந்து தாலுகாக்களுக்குட்பட்ட, மலைப்பகுதிகளில் வசிக்கும் மலைவாழ் மற்றும் பழங்குடியின மக்களின் இருப்பிடத்துக்கே சென்று, ஸ்மார்ட் ரேஷன் கார்டு வழங்கும் பணிகளை, மாவட்ட நிர்வாகம் துவக்கியுள்ளது.

கோவை வடக்கு, மேட்டுப்பாளையம், பேரூர், மதுக்கரை, ஆனைமலை, வால்பாறை ஆகிய ஐந்து தாலுகாக்களில், மலைப்பகுதிகளில் வசிக்கும் மலைவாழ் மற்றும் பழங்குடியின மக்களில் பெரும்பாலானோருக்கு, ஸ்மார்ட் ரேஷன் கார்டுகள் இல்லை. இந்த தகவல், சமீபத்தில் வருவாய் மற்றும் வழங்கல்துறையினர் இணைந்து மேற்கொண்ட ஆய்வில் தெரியவந்தது.



இதையடுத்து, கலெக்டர் தலைமையில் மாவட்ட வருவாய் அலுவலர், அந்தந்த தாலுகா தாசில்தார்கள், மாவட்ட வழங்கல் அலுவலர், அதில் அங்கம் வகிக்கும் வழங்கல்துறை வட்ட வழங்கல் அலுவலர்கள் உள்ளிட்டோர் பங்கேற்ற, சிறப்புக்கூட்டம் நடந்தது.

கலெக்டர் அறிவுறுத்தல் இதில், கோவையிலுள்ள ஐந்து தாலுகா எல்லைக்குட்பட்ட மலைவாழ் வசிக்கும் பகுதிகளில், ஆய்வு மேற்கொள்ளவேண்டும், அவர்களுக்குதேவையான அடிப்படை கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்திக்கொடுக்க வேண்டும் என்று, கலெக்டர் அறிவுறுத்தினார்.

இதையடுத்து வட்ட வழங்கல் அலுவலர், வருவாய் ஆய்வாளர்கள், வழங்கல்துறை துணை தாசில்தார்கள் அடங்கிய குழுவினர், மலைவாழ் மக்கள் மற்றும் பழங்குடியின மக்கள் வசிக்கும் பகுதிகளில் ஆய்வு மேற்கொண்டனர்.

குழந்தைகள் பாதுகாப்பிற்கு முக்கியத்துவம் அலுவலர்களுக்கு கலெக்டர் அறிவுறுத்தல்

குழந்தைகள் பாதுகாப்பிற்கு முக்கியத்துவம் அலுவலர்களுக்கு கலெக்டர் அறிவுறுத்தல்

ஆய்வில், எவ்வளவு குடும்பத்தினர் இருக்கின்றனர் என்ற விபரங்களை, மலைவாழ் மக்கள் வசிக்கும் பகுதிகளில் உள்ள, மூப்பன் என்றழைக்கப்படும் ஊர் தலைவர் மற்றும் நிர்வாகிகளிடம் கேட்டறிந்தனர்.

திருமணமான தம்பதியர், குழந்தைகள் குறித்த விபரங்கள் சேகரித்தனர்.

ஸ்மார்ட் கார்டு தயாரிப்பு அதன் அடிப்படையில் திருமணச்சான்று, குழந்தைக்கான பிறப்பு சான்று ஆதார் அட்டை, ஆகியவற்றை வருவாய்த்துறை விதிமுறைகளின் படி தயாரித்து, அதனுடன் போட்டோக்களை எடுத்து இணைத்து, ஸ்மார்ட்கார்டு தயாரிக்கப்பட்டது.

இதன்படி, பொள்ளாச்சியை அடுத்த திம்மங்குத்து கிராமத்தில் வசிக்கும், 18 பேருக்கு முதற்கட்டமாக ஸ்மார்ட் ரேஷன்கார்டு தயாரிக்கப்பட்டது. அவற்றை கலெக்டர் நேற்று அம்மக்களுக்கு வழங்கினார்.

இது குறித்து, மாவட்ட வழங்கல் அலுவலர் விஸ்வநாதன் கூறுகையில், ''அடுத்த கட்டமாக மீதமுள்ள நான்கு தாலுகாக்களிலும், பணிகளை துவங்கி விரைவாக ஸ்மார்ட் கார்டு உள்ளிட்ட ஆவணங்களை வழங்க, நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது,'' என்றார்.

## அரசு பள்ளி ஆசிரியை வேலை வாங்கித் தருவதாக மோசடி

ஈச்சனாரி மாசேகவுண்டன்பாளையம்பகுதியை சேர்ந்தவர் ராஜேஸ்வரி. தனியார் பள்ளி ஆசிரியை. ஆர் எஸ் புரத்தைச் சேர்ந்த மணி என்பவர் அரசு பள்ளியில் ஆசிரியர் வேலை வாங்கி தருவதாக, இவரிடம் ரூபாய் 8 லட்சம் மோசடி செய்துள்ளார். நீண்ட நாட்களாக அரசு வேலை கிடைக்காததால் ராஜேஸ்வரி ஆர் எஸ் புரம் போலீசில் புகார் அளித்தார். போலீசார் மணி மீது வழக்கு பதிந்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

## கோவையில் பாலியல் தொழில்: 4 பேர் கைது

கோவை சித்தாபுதுாரை சேர்ந்த 26 வயது இளைஞர், காந்திபுரம் கிராஸ் கட் சாலையில் நேற்று நின்றிருந்தார். அப்போது, அங்கு வந்த பெண் தன்னிடம், இளம்பெண்கள் இருப்பதாகவும், பணம் கொடுத்தால் உல்லாசமாக இருக்கலாம் என கூறியுள்ளார். அதிர்ச்சியடைந்த அவர், காட்டூர் போலீசாருக்கு தகவல் அளித்தார். விரைந்து சென்ற போலீசார் வாடகை வீட்டில் பாலியல் தொழிலில் ஈடுபட்ட மீனா குமாரி, சௌமியா, காவேரி, சினேகா உள்ளிட்டோரை கைது செய்தனர்.






# ஆம்ஸ்ட்ராங் கொலை: 17 பேரின் குண்டர் சட்ட நடவடிக்கை ரத்து சென்னை ஐகோர்ட்டு



சென்னை, ஆக. 7

பகுஜன் சமாஜ் கட்சியின் மாநில தலைவராக இருந்தவர் ஆம்ஸ்ட்ராங். இவர் கடந்த ஆண்டு ஜூலை 5ம் தேதி தனது வீட்டின் அருகே வெட்டிக் கொல்லப்பட்டார்.

இந்த வழக்கில் இது வரை 27 பேர் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். இவர்களில் 26 பேர் குண்டர் சட்டத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குண்டர் சட்டத்தை ரத்து செய்யக்கோரி நாகேந்திரன் உள்ளிட்ட 17 பேர் சென்னை ஐகோர்ட்டில் மனுத்தாக்கல் செய்தனர். இந்த மனுக்கள் மீதான விசாரணை நீதிபதிகள் எம்.எஸ்.ரமேஷ், வி.லட்சுமி நாராயணன் அமர்வில் நடைபெற்று வந்தது.

காவல்துறை தரப்பில், சட்டம் ஒழுங்கு மற்றும் பொது அமைதியை கருத்தில்கொண்டே 26 பேரும் குண்டர் சட்டத்தில் அடைக்கப்பட்டதாக வாதிடப்பட்டது.

மனுதாரர்கள் தரப்பில், தாங்கள் கைது செய்யப்பட்டதற்கும், குண்டர் சட்டத்தில் அடைப்பதாக உத்தரவு பிறப்பிக்கப்பட்டதற்கும் இடையேயான கால தாமதத்தை கருத்தில் கொண்டு குண்டர் சட்டத்தை ரத்து செய்ய வேண்டுமென கோரிக்கை வைத்தனர். மேலும், மனதை செலுத்தாமல் இயந்திர தனமாக இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இந்தநிலையில், இந்த வழக்கில் இன்று தீர்ப்பளித்த நீதிபதிகள், 17 பேர் மீதான குண்டர் சட்டத்தை ரத்து செய்து உத்தரவிட்டனர். அதே சமயத்தில், இவர்களின் குண்டர் சட்டம் ரத்து செய்யப்பட்டுவிட்ட காரணத்தினால் மட்டுமே இவர்களுக்கு ஜாமீன் வழங்கி விட கூடாது என்றும், வழக்கின் தீவிரத்தை முழுமையாக கருத்தில் கொண்டே ஜாமீன் மனுக்கள் மீது முடிவெடுக்க வேண்டும் என்றும் நீதிபதிகள் தெரிவித்தனர்.

# சிறப்பு காவல் ஆய்வாளர் படுகொலையில் தொடர்புடையவர்களுக்கு கடும் தண்டனை பெற்றுத்தர வேண்டும்: டி.டி.வி.தினகரன் பேச்சு



சென்னை, ஆக. 7

அ.ம.மு.க. பொதுச்செயலாளர் டி.டி.வி.தினகரன் தனது எக்ஸ் பக்கத்தில் வெளியிட்ட பதிவில் தெரிவித்திருப்பதாவது,

திருப்பூர் அருகே ரோந்து பணியில் ஈடுபட்டிருந்த சிறப்பு காவல் ஆய்வாளர் வெட்டிப் படுகொலை – தன் துறையைச் சார்ந்த காவல் உதவி ஆய்வாளரைப் பாதுகாக்க முடியாத முதலமைச்சரால் பொது மக்களை எப்படி பாதுகாக்க முடியும்?

திருப்பூர் மாவட்டம் தாராபுரம் அருகே இரவு ரோந்து பணியில் ஈடுபட்டிருந்த குடிமங்கலம் காவல்நிலைய சிறப்பு உதவி ஆய்வாளர் சண்முகவேல் அவர்கள் அடையாளம் தெரியாத நபர்களால் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டிருப்பதாக வெளியாகியிருக்கும் செய்திகள் மிகுந்த அதிர்ச்சியை ஏற்படுத்துகின்றன.

திருவள்ளூர் ஊத்துக்கோட்டையில் மாந்தோப்பு காவலாளி படுகொலை, ராணிப்பேட்டை மாவட்டம் ஆற்காடு அருகே இளைஞர் வெட்டிக் கொலை எனக் கடந்த 24 மணி நேரத்தில் மட்டும் அடுத்தடுத்து மூன்று படுகொலைச் சம்பவங்கள் அரங்கேறியிருப்பது பொதுமக்கள் மத்தியில் பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

சாமானிய மக்கள் தொடங்கி அரசு ஊழியர்கள், மருத்துவர்கள், பத்திரிகையாளர்கள், காவல்துறையினர், அரசியல் கட்சித்தலைவர்கள் வரை யாருக்குமே பாதுகாப்பற்ற சூழ்நிலையை ஏற்படுத்தியிருக்கும் முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தமிழகத்தை யாருக்காக ஆட்சி செய்து கொண்டிருக்கிறார்? என்ற சந்தேகம் அனைவரின் மத்தியிலும் எழுந்துள்ளது.

தமிழகத்தில் நாளுக்கு நாள் அதிகரித்து வரும் கொலை, கொள்ளைகள், பெண்களுக்கு எதிரான குற்றச்சம்பவங்கள் தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு என்று ஒன்று இருக்கிறதா? என்ற கேள்வியை எழுப்புவதோடு, திமுக அரசின் மீதும் அதன் காவல்துறையின் மீதும் குற்றவாளிகளுக்குத் துளியளவும் பயமில்லை என்பதையே வெளிச்சம் போட்டுக் காட்டுகின்றன.

எனவே, சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் சண்முகவேல் அவர்களின் படுகொலையில் தொடர்புடைய அனைவரையும் கைது செய்து சட்டத்தின் முன் நிறுத்தி கடுமையான தண்டனையைப் பெற்றுத் தருவதோடு, இனியாவது சந்தி சிரிக்கும் சட்டம் ஒழுங்கின் மீது கூடுதல் கவனம் செலுத்தி பொது மக்களுக்குப் பாதுகாப்பான சூழலை ஏற்படுத்தித் தருமாறு முதல்ஆமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை வலியுறுத்துகிறேன். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஆண் நண்பர்களை மயக்கி நட்சத்திர ஓட்டலில் தங்கி உல்லாசம்: தொழிலதிபரிடம் நகை திருடிய தோழி

சென்னை, ஆக. 7

சென்னை ஆவடி காமராஜர் நகரைச் சேர்ந்தவர் மணி (வயது 47). பிரபல தொழிலதிபரான இவர் சமீபத்தில் சென்னை கோடம்பாக்கம் நெடுஞ்சாலையில் உள்ள நட்சத்திர ஓட்டலில் அறை எடுத்து தங்கினார். அவருடன் தோழி தீபிகாவும் (24) தங்கியிருந்தார். அப்போது இருவரும் ஒன்றாக மது அருந்தியதாக தெரிகிறது. போதை மயக்கத்தில் மணி தூங்கிவிட்டார். காலையில் எழுந்து பார்த்தபோது அதிர்ச்சி காத்திருந்தது.

தோழி தீபிகாவை காணவில்லை. மணியின் கழுத்தில் அணிந்திருந்த 10 பவுன் தங்கச்சங்கிலியும் திருட்டு போய் இருந்தது.

இதுதொடர்பாக மணி தேனாம்பேட்டை போலீஸ் நிலையத்தில் புகார் கொடுத்திருந்தார். இதுதொடர்பாக தேனாம்பேட்டை குற்றப்பிரிவு இன்ஸ்பெக்டர் சபரிதாசன் வழக்குப் பதிவு செய்து விசாரித்தார்.

விசாரணையில் மணியுடன் ஓட்டல் அறையில் தங்கி இருந்த அவரது தோழி தீபிகாதான் நகையை திருடி சென்றது தெரியவந்தது. தீபிகாவை தனிப்படை போலீசார் தேடி வந்தனர். இந்த நிலையில் தீபிகாவை குன்றத்தூரில் வைத்து நேற்று அதிரடியாக கைது செய்தனர். மணியிடம் திருடிய 10 பவுன் தங்கச்சங்கிலியை தீபிகா விற்றுவிட்டதாக தெரிகிறது. விற்கப்பட்ட தங்கச் சங்கிலியை வாங்கியவர் அதை உருக்கி தங்ககட்டியாக மாற்றி உள்ளார். அதை மீட்கும் பணியில் போலீசார் ஈடுபட்டுள்ளனர்.

தீபிகா திருமணம் ஆகாதவர். அவரது தந்தை சென்னை பெருநகர மாநகராட்சியில் ஊழியராக வேலை பார்க்கிறார். பெற்றோரை பிரிந்து தீபிகா தனியாக குன்றத்தூரில் வாழ்ந்து வந்துள்ளார். தீபிகாவுக்கு நிறைய ஆண் நண்பர்கள் இருப்பதாக கூறப்படுகிறது. அவர்களில் தொழிலதிபர் மணியும் ஒருவர் என்று தெரிகிறது.

ஆண் நண்பர்களை மயக்கி அவர்களிடம் உல்லாசமாக இருந்துவிட்டு இதுபோல் பணம், நகையை பறிப்பதை தீபிகா வழக்கமாக செய்து வந்ததாகவும், அதுபற்றி அவரிடம் விசாரணை நடப்பதாகவும் போலீசார் தெரிவித்தனர். தங்கக் கட்டி மீட்கப்பட்டு விசாரணை முடிந்தவுடன் தீபிகா நீதிமன்ற காவலில் சிறையில் அடைக்கப்படுவார் என்றும் போலீசார் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சென்னைப் பல்கலைக்கழக அலுவலர்கள், பணியாளர்களின் ஊதியத்தை குறைக்கும் நடவடிக்கையை கைவிட வேண்டும் ஓ.பன்னீர்செல்வம்

சென்னை, ஆக. 7

தமிழக முன்னாள் முதல் அமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது, இந்தியாவிலேயே மிகப் பழமை வாய்ந்த பல்கலைக்கழகம் சென்னைப் பல்கலைக்கழகம் பல்கலைக்கழக மானியக் குழுவால் 'சிறந்த திறன்கொண்ட பல்கலைக்க ழகம்' என்ற அந்தஸ்தை பெற்றதோடு, ஐந்து நட்சத்திர தகுதியையும் சென்னைப் பல்கலைக்கழகம் பெற்றிருக்கிறது. இந்திய நாட்டின் குடியரசுத் தலைவர் பதவியை வகித்த டாக்டர் S. இராதாகிருஷ்ணன், V.V. கிரி, . R. வெங்கட்ராமன், டாக்டர் APJ அப்துல் கலாம். நோபல் பரிசு பெற்ற சர். CV. இராமன், டாக்டர் S. சந்திரசேகர் ஆகியோரை இந்த நாட்டிற்கு அளித்த பல்கலைக்கழகம் சென்னை பல்கலைக்கழகம். இப்படிப்பட்ட சிறப்பு வாய்ந்த பல்கலைக்கழகத்தை சீரழித்த பெருமை தி.மு.க. அரசையே சாரும். தி.மு.க அரசு பொறுப்பேற்றதிலிருந்தே உதவிப் பேராசிரியர்கள் நியமனம். பணியாளர்கள் நியமனம் ஆகியவை முறையாக செயல்படுத்தப்படவில்லை என்பதோடு, சென்னைப் பல்கலைக்கழகத்திற்கான நிதியை தி.மு.க. அரசு முறையாக கொடுக்கவில்லை. இதன் காரணமாக, அங்கு பணியாற்றும் பேராசிரியர்கள், உதவிப் பேராசிரியர்கள் மற்றும் பணியாளர்களுக்கான சம்பளம் வழங்குவதிலும், ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதியம் வழங்குவதிலும் காலதாமதம் ஏற்பட்டு வருகிறது. இது தவிர, தொலைதூரக் கல்வி பட்டப் படிப்புகள், பட்டயப் படிப்புகள் மற்றும் பட்ட மேற்படிப்புகளை குறித்த கால அளவிற்குள் முடிக்க இயலாத சூழ்நிலை நிலவுகிறது.

இதனைக் கண்டித்து, நானும் அறிக்கைகள் விடுத்திருந்தேன். இருப்பினும், சென்னைப் பல்கலைக்கழகத்தின் நிதியை சீர் செய்ய தி.மு.க. அரசு எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை மாறாக அங்கு பணியாற்றும் அலுவலர்கள் மற்றும் பணியாளர்களின் ஊதியத்தை குறைக்கும் நடவடிக்கையில் தி.மு.க. அரசு ஈடுபட்டுள்ளதாக செய்தி வந்துள்ளது. சென்னைப் பல்கலைக்கழகத்தின் சிண்டிகேட் கூட்டம் இந்த வார இறுதியில் நடைபெற உள்ளதாகவும், இந்தக் கூட்ட கூட்டத்தில் அலுவலர்கள் மற்றும் பணியாளர்களின் ஊதியத்தை குறைக்க முடிவு எடுக்கப்பட உள்ளதாகவும், இந்த முடிவு எடுக்கப்படும். பட்சத்தில் அவர்களுடைய மாத கஊதியம் குறைந்தபட்சம் பத்தாயிரம் ரூபாயிலிருந்து முப்பதாயிரம் ரூபாய் வரை குறைக்கப்படும் என்றும் சென்னைப் பல்கலைக் கழக பணியாளர் சங்கம் தெரிவித்துள்ளது. சென்னைப் பல்கலைக்கழகத்தில் பணியாற்றும் அலுவலர்கள் மற்றும் ஊழியர்கள் முதலில் பாரத ரிசர்வ் வங்கிக்கு இணையான ஊதியத்தை பெற்று வந்ததாகவும், தற்போது தலைமைச் செயலக ஊழியர்களுக்கு இணையான ஊதியம் பெற்று வருவதாகவும், இந்த ஊதிய விகிதம் நாற்பது ஆண்டுகளுக்கும் மேலாக நடைமுறையில் உள்ளதாகவும், தற்போது இந்த ஊதிய விகிதத்தையும் குறைக்க தி.மு.க அரசு நடவடிக்கை எடுத்து வருவதாகவும் சென்னைப் பல்கலைக்கழக பணியாளர் சங்கம் 35 சென்னைப் தெரிவிக்கிறது. எனவே, பணியாளர்களின் ஊதியக் குறைப்பு நடவடிக்கையை கைவிடவில்லையெனில் நாளை முதல் போராட்டம் நடத்தப்படும் என்றும் சங்கம் எச்சரிக்கை விடுத்து ள்ளது. இருக்கின்ற ஊதியத்தை குறைப்பது என்பது தொழிலாளர் விரோதக் கொள்கை. தனியார் நிறுவனங்களுக்கு எடுத்துக்காட்டாக விளங்க வேண்டிய மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசே தொழிலாளர் விரோதக் கொள்கையில் ஈடுபடுவது என்பது நியாயமற்றது. தி.மு.க. அரசின் பணியாளர் விரோதக் கொள்கைக்கு எனது கடும் கண்டனத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். சென்னைப் பல்கலைக்கழகம் மட்டுமல்லாமல் தமிழ்நாட்டில் உள்ள பெரும்பாலான பல்கலைக்கழகங்கள் நிதி நெருக்கடியில் சிக்கித் தவிக்கின்றன. சென்னைப் பல்கலைக்கழகத்திற்கே இந்த நிலைமை என்றால், மற்ற பல்கலைக்கழகங்களின் நிலைமையை நினைத்துப் பார்க்கவே அச்சமாக இருக்கிறது. நிதி நெருக்கடியிலிருந்து சென்னைப் பல்கலைக்கழகத்தை மீட்டெடுக்கும் வகையில், பல்கலைக் கழகத்தின் வருமானத்தை அதிகரிக்கவும், பல்கலைக் கழகத்திற்கு உரிய மானியத்தை உரிய நேரத்தில் வழங்கவும், அங்கு நடைபெறும் முறைகேடுகளை களையவும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும்; அலுவலர்கள் மற்றும் பணியாளர்களின் ஊதியத்தை குறைக்கும் நடவடிக்கையை கைவிட வேண்டுமென்றும் அண்ணா திராவிட முன்னேற்றக் கழக தொண்டர்கள் உரிமை மீட்புக் குழுவின் சார்பில் முதலமைச்சர் அவர்களை வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பீரோ மீது இருந்த புத்தகத்தை எடுத்தபோது விபரீதம்;மாணவிக்கு சாவு

திண்டுக்கல் ஆக. 7

திண்டுக்கல் மாவட்டம், பட்டிவீரன்பட்டி அருகே உள்ள சித்தரேவு கிராமத்தை சேர்ந்தவர் ராமச்சந்திரன். கூலித்தொழிலாளி. இவரது மனைவி சின்னம்மாள். இவர்களுக்கு சிவகிருஷ்ணன் என்ற மகனும், நந்தனா (11) என்ற மகளும் உண்டு. சித்தரேவில் உள்ள அரசு பள்ளியில் சிவகிருஷ்ணன் 9ம் வகுப்பும், நந்தனா 6ம் வகுப்பும் படித்து வந்தனர்.

இந்தநிலையில் நந்தனாவின் பெற்றோர் வழக்கம்போல் வேலைக்கு சென்று விட்டனர். சிவகிருஷ்ணனும் வெளியே சென்றுவிட்டான். பின்னர் நந்தனா பள்ளிக்கு புறப்பட்டாள். அப்போது வீட்டில் இருந்த பீரோவின் மேற்பகுதியில் புத்தகம் ஒன்று இருந்ததாக கூறப்படுகிறது. நந்தனா கட்டிலில் நின்றுகொண்டு பீரோ மீது இருந்த புத்தகத்தை எடுக்க முயன்றார். அப்போது எதிர்பாராத விதமாக கால் தவறி வீட்டின் உள்ளே துணி காய போடுவதற்காக கட்டியிருந்த கயிற்றில் விழுந்தார். இதில் மாணவியின் தலை கயிற்றில் சிக்கியது. அதிலிருந்து மீண்டுவர மாணவி போராடினார்.

ஆனால் அதிலிருந்து வெளியே வர முடியவில்லை. இதனால் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக இறந்தார். இச்சோக சம்பவம் குறித்து போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# முதலிரவில் புதுப்பெண் தற்கொலை; காரணம் அறியாமல் தவித்த மாப்பிள்ளை



நகரி, ஆக. 7

இரு மனம் இணையும் திருமண பந்தத்தில் அடியெடுத்து வைக்கும் ஆணும், பெண்ணும் பல கனவுகளோடும், கற்பனைகளோடும் இருப்பார்கள்.இந்த திருமணத்தில் அடியெடுத்து வைத்த ஒரு இளம்பெண், முதல் நாளிலேயே தனது உயிரை மாய்த்துக்கொண்ட பரிதாப சம்பவம் பற்றிய விவரம் வருமாறு:

ஆந்திர மாநிலம் ஸ்ரீசத்ய சாயி மாவட்டம் சோமந்தூர்பள்ளியை சேர்ந்தவர் ஹர்ஷிதா (வயது 22). இவருக்கும், கர்நாடக மாநிலத்தைச் சேர்ந்த நாகேந்திரா என்பவருக்கும் நேற்று முன்தினம் பெற்றோர் சம்மதத்துடன் திருமணம் நடந்தது.இந்த திருமணத்தில் உறவினர்களும், நண்பர்களும் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினர். அனைவருக்கும் திருமண வீட்டார் விருந்து அளித்து அசத்தினர். மணமக்களுக்கு பரிசு பொருட்கள் வழங்கி அனைவரும் வாழ்த்தி சென்றனர்.

இதனையடுத்து சோமந்தூர் பள்ளியில் உள்ள மணமகள் வீட்டில் வைத்து புதுமணத்தம்பதியின் முதலிரவுக்கு ஏற்பாடு செய்யப்பட்டு இருந்தது. இதற்கான ஏற்பாடுகளை உறவினர்கள் செய்திருந்தனர். இதற்கிடையே வீட்டில் உள்ள ஒரு அறைக்குள் சென்ற ஹர்ஷிதா கதவை அடைத்துக் கொண்டார். நீண்ட நேரமாக வெளியே வராததால் சந்தேகம் அடைந்த உறவினர்கள், கதவை தட்டிப் பார்த்தனர். ஆனால் திறக்கப்படவில்லை. அதன்பின்னர் கதவை உடைத்து உள்ளே சென்றனர். அங்கு மின்விசிறியில் தூக்கில் தொங்கிய மணமகளை மீட்டு உடனே ஆஸ்பத்திரிக்கு கொண்டு சென்றனர். ஆனால் ஹர்ஷிதா ஏற்கனவே இறந்துவிட்டதாக டாக்டர்கள் தெரிவித்தனர்.

உடலை பார்த்து பெற்றோரும், உறவினர்களும் கதறி அழுதனர். திருமண வீடு துக்க வீடானது. சம்பவம் குறித்து வழக்குப்பதிவு செய்த போலீசார், இளம்பெண் தற்கொலைக்கான காரணம் குறித்து விசாரித்து வருகிறார்கள். முதலிரவில் புதுப்பெண் எதற்காக தற்கொலை செய்து கொண்டார் என்பது அறியாமல் மாப்பிள்ளை தவித்ததாக கூறப்படுகிறது.

# மருத்துவ மாணவர்கள் மற்றும் பட்ட மேற்படிப்பு மருத்துவ மாணவர்கள் பணி நேரம் குறித்து மத்திய அரசு முறையாக ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்க வேண்டும்: டாக்டர் அழக வெங்கடேசன் கோரிக்கை



டாக்டர் அழகவெங்கடேசன் சமீபத்தில் மருத்துவக் கல்லூரியில் மருத்துவ மாணவர்கள் பணி புரிந்த காலத்திற்கு முறையாக உதவித்தொகை (stipend) வழங்கப்படாதது குறித்து உச்ச நீதிமன்றம் தலையிட்டு அவர்களுக்கு வழங்கப்பட வேண்டிய உதவித்தொகையை வழங்க உத்தரவிட்டுள்ளதை நாம் கூர்ந்து கவனிக்க வேண்டும்.

CRMI மருத்துவ மாணவர்கள், PG பட்ட மேற்படிப்பு மருத்துவ மாணவர்கள் பணி நேரம் குறித்து முறையாக ஆய்வு செய்து அவர்கள் உடல்நலம் மற்றும் மனநலம் பாதிக்கப்படாமல் பணி வழங்கப்படுவதை உறுதி செய்ய வேண்டும். பல்வேறு தேர்வுகள் மற்றும் பல வருடங்கள் படிப்பை முடித்து மருத்துவமனைக்கு வரும் மருத்துவ பயனாளிகளுக்கு முன்களத்தில் நின்று அவர்கள் பிணி தீர்க்க பணி புரியும் மருத்துவ மாணவர்கள் பணி நேரம் முறைப்படுத்தப்பட வேண்டும். மருத்துவமனையின் முதுகெலும்பாக இருக்கும் மருத்துவ மாணவர்களின் பணி என்றும் போற்றப்பட வேண்டும். மக்களுக்கு உடல்நல சிரமங்கள் என்று வரும் போது அவர்கள் பிணி அறிந்து முதலுதவி செய்து உயிர் காக்கும் அவர்களுக்கு உரிய அங்கீகாரம் கொடுக்க வேண்டும்.

இளைய தலைமுறை மருத்துவ மாணவர்களுக்கு நிட்சயம் நாம் துணை நிற்க வேண்டும். அவர்கள் மீது ஏவப்படும் வேலைப்பளுவை தடுக்க முன்வரவேண்டும். முறையான வேலை நேரம் வழங்கப்பட வேண்டும். வாரத்திற்கு 42 மணி நேரம் மட்டுமே பணி வழங்கப்பட வேண்டும். வாரந்திர ஓய்வு, விடுப்பு எடுக்க அனுமதிக்க வேண்டும்.

நம் போல இளைய தலைமுறை மருத்துவர்கள் கஷ்டப்படுவதை தடுக்க முன்வர வேண்டும். அவர்கள் பணி பாதுகாப்பு, உரிய சம்பளம் மற்றும் வேலைப்பளு திணிப்பு இல்லாமல் இருப்பதை நாம் உறுதி செய்ய வேண்டும். என்றார்.

# நெல்லையில் 15 நாட்கள் ஆர்ப்பாட்டம், பேரணி நடத்த தடை: போலீஸ் கமிஷனர் உத்தரவு

திருநெல்வேலி ஆக. 7

நெல்லை மாநகர போலீஸ் கமிஷனர் சந்தோஷ் ஹாதிமணி வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

சென்னை மாநகர போலீஸ் சட்டம்1997 பிரிவு 41 (2)ன் படி நெல்லை மாநகர பகுதியில் இன்று (புதன்கிழமை) முதல் வருகிற 20ந்தேதி வரை 15 நாட்களுக்கு பொதுக்கூட்டம், ஆர்ப்பாட்டம், பேரணி, தர்ணா நடத்த தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. பொது அமைதி, மக்கள் பாதுகாப்பை கருத்தில் கொண்டு இந்த உத்தரவு பிறப்பிக்கப்படுகிறது.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

# சென்னையில் இருந்து திருச்சி புறப்பட்ட விமானத்தில் எந்திர கோளாறு பயணிகள் அவதி





சென்னை ஆக. 7

சென்னையில் இருந்து திருச்சிக்கு இன்று அதிகாலை 5.45 மணிக்கு இண்டிகோ விமானம் புறப்பட இருந்தது.

அந்த விமானத்தில் 73 பயணிகள் பயணிக்க இருந்தனர். ஓடுபாதையில் இருந்து புறப்பட்ட தயாரானபோது விமானத்தில் எந்திர கோளாறு ஏற்பட்டு இருப்பதை விமானி கண்டுபிடித்தார்.

இதையடுத்து, விமானத்தை ஓடுபாதையிலேயே விமானி நிறுத்தினார். பின்னர், எந்திர கோளாறு சரிசெய்யப்பட்டு 1 மணிநேர தாமதத்திற்குப்பின் விமானம் 6.45 மணியளவில் திருச்சி புறப்பட்டது. காலதாமதத்தால் பயணிகள் அவதியடைந்தனர்.

# அவன் இல்லாம வாழ முடியாது.. காதலன் தற்கொலை செய்த அதே தேதியில்.. இளம்பெண் எடுத்த விபரீத முடிவு



குளச்சல், ஆக. 7

குளச்சல் அருகே உள்ள கணேசபுரம் பகுதியை சேர்ந்தவர் செல்லத்துரை. இவருடைய மனைவி புஷ்பம். இவர்களுக்கு 4 மகள்களும், ஒரு மகனும் உள்ளனர். கடந்த 11 வருடங்களுக்கு முன்பு செல்லத்துரை இறந்து விட்டார். இதற்கிடையே புஷ்பத்தின் 3 மகள்கள் காதலித்து திருமணம் கொண்டனர். இதனால் புஷ்பம் கடைசி மகள் வித்யா (வயது 23) மற்றும் மனநலம் குன்றிய மாற்றுத்திறனாளி மகனுடன் தனியாக வசித்து வந்துள்ளார்.

வித்யா அருகில் உள்ள தென்னைநார் கம்பெனியில் வேலை பார்த்து வந்தார். அப்போது அந்த கம்பெனியில் பணியாற்றிய மார்த்தாண்டம் பகுதியை சேர்ந்த அருண் என்பவரை காதலித்தார். இவர்களுடைய காதலை பெற்றோரை இழந்த அருணின் உறவினர்கள் ஏற்க மறுத்தனர்.

இதை தொடர்ந்து கடந்த மாதம் 5ம் தேதி அருண் வீட்டில் தூக்குப்போட்டு தற்கொலை செய்து கொண்டார். அன்றிலிருந்து வித்யா மிகுந்த மன உளைச்சலுக்கு ஆளாகினார். இந்தநிலையில் நேற்று காலை வித்யா வீட்டில் சமையல் வேலைகளை முடித்து விட்டு கழிவறைக்கு சென்றார்.


ஆனால் வெகுநேரமாகியும் அவர் கழிவறையில் இருந்து வெளியே வரவில்லை. இதனால் சந்தேகமடைந்த உறவினர்கள் கதவை உடைத்து உள்ளே சென்று பார்த்தனர். அப்போது அங்கு கழிவறையில் துப்பட்டாவால் தூக்குப்போட்ட நிலையில் வித்யா தொங்கி கொண்டிருந்தார்.

உடனே உறவினர்கள் வித்யாவை மீட்டு குளச்சல் அரசு ஆஸ்பத்திரிக்கு கொண்டு சென்றனர். அங்கு அவரை பரிசோதித்த டாக்டர்கள் அவர் ஏற்கனவே இறந்து விட்டதாக தெரிவித்தனர்.

இதுகுறித்து தகவல் அறிந்து வந்த குளச்சல் போலீசார், வித்யா உடலை மீட்டு பிரேத பரிசோதனைக்காக ஆசாரிபள்ளம் அரசு ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர். மேலும் இது குறித்து வழக்குப்பதிவு செய்து போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

காதலன் சென்ற மாதம் தற்கொலை செய்து கொண்ட துக்கம் தாங்காமல், அதே தேதியில் இளம்பெண் தூக்குப்போட்டு தற்கொலைசெய்துகொண்ட சம்பவம் அப்பகுதியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தி உள்ளது.

## 2025ம் ஆண்டு தமிழ் செம்மல் விருதுக்கு விண்ணப்பிக்கலாம்: தூத்துக்குடி கலெக்டர் தகவல்



தூத்துக்குடி ஆக. 7

தூத்துக்குடி கலெக்டர் இளம்பகவத் வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

"தமிழ்நாட்டில் தமிழ்த் தொண்டாற்றிவரும் தமிழ் ஆர்வலர்களுக்கு பெரிதும் ஊக்கமளிக்கும் வகையில் தமிழ்ச் செம்மல் விருது, தமிழ் வளர்ச்சித்துறையால் 2015ம் ஆண்டு முதல் வழங்கப்பட்டு வருகிறது. இவ்விருதுக்கு தமிழகத்திலுள்ள அனைத்து மாவட்டங்களில் உள்ள தமிழ் ஆர்வலர்களை தெரிவு செய்து மாவட்டத்திற்கு ஒருவர் என்ற முறையில் "தமிழ்ச் செம்மல்" விருது வழங்கப்பட்டு வருகிறது.

அவ்வகையில் தூத்துக்குடி மாவட்டத்திலுள்ள தமிழ் ஆர்வலர்களிடமிருந்து 2025ம் ஆண்டிற்கான தமிழ்ச் செம்மல் விருதுக்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. இவ்விருதுக்குரிய விண்ணப்பப்படிவத்தை தமிழ் வளர்ச்சித் துறையின் tamilvalarchithurai.tn.gov.in என்ற வலைத்தளத்தில் இலவசமாக பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

விருதுக்கான விண்ணப்பப் படிவத்தை உரியவாறு நிறைவு செய்து, தன்விவரக்குறிப்பு, நூல்கள்/ கட்டுரை வெளியிட்டு இருந்தால் அது தொடர்பான விவரங்கள், தமிழ் சங்கங்கள், தமிழ் அமைப்புகளில் பொறுப்பில் அல்லது உறுப்பினராக இருந்தால் அது தொடர்பான விவரம், தமிழ் அமைப்புகளின் பரிந்துரைக் கடிதம் மற்றும் 2 நிழற்படங்கள், ஆற்றிய தமிழ் பணிக்கான சான்றுகள் ஆகியவற்றை இணைத்து தூத்துக்குடி மாவட்டத் தமிழ் வளர்ச்சித் துணை இயக்குநர் அலுவலகத்திற்கு 2.9.2025க்குள் கிடைக்கப் பெறும் வகையில் அனுப்பி வைக்கவேண்டும்.

மேலும் விவரங்களுக்கு தமிழ் வளர்ச்சித் துணை இயக்குநர், மாவட்ட கலெக்டர் அலுவலகவளாகம், தூத்துக்குடி என்ற முகவரியில் நேரில் தகவல்களை தெரிந்துக் கொள்ளலாம்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## காவல்துறையினருக்கான துப்பாக்கி சுடும் போட்டி: தென்மண்டல அணி முதலிடம் எஸ்பி பாராட்டு



தூத்துக்குடி ஆக. 7

தமிழ்நாடு காவல்துறையினருக்கான மாநில அளவிலான துப்பாக்கி சுடும் போட்டி செங்கல்பட்டு மாவட்டம் ஒத்திவாக்கத்தில் உள்ள கமாண்டோ பயிற்சி பள்ளி மையத்தில் கடந்த 24.7.2025 முதல் 26.7.2025 வரை நடைபெற்றது. இதில் ரைஃபில் (RIFILE), ரிவால்வர் (REVOLVER), கார்பைன் (CARBINE) ஆகிய பிரிவுகளின் கீழ்நடைபெற்றதுப்பாக்கி சுடும் போட்டியில் பல்வேறு மண்டலங்களாக காவல்துறையினர் கலந்து கொண்டனர்.

இதில் தென்மண்டல காவல்துறை சார்பாக தூத்துக்குடி மாவட்ட எஸ்.பி. ஆல்பர்ட் ஜான் தலைமையில் தூத்துக்குடி, தென்காசி, திருநெல்வேலி, கன்னியாகுமரி, மதுரை, விருதுநகர், ராமநாதபுரம், தேனி, திண்டுக்கல், சிவகங்கை ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த 31 காவல்துறையினர் கலந்துகொண்டு ஒட்டு மொத்த துப்பாக்கி சுடுதல் ஆண்கள் பிரிவில் தென் மண்டல காவல்துறையினர் முதலிடத்தை பிடித்து 4 தங்க பதக்கங்கள், 2 வெள்ளி பதக்கங்கள் மற்றும் 2 வெண்கல பதக்கங்களை பெற்றும் மேலும் பெண்கள் பிரிவில் ஒரு தங்கம், ஒரு வெள்ளி, ஒரு வெண்கலம் என மொத்தம் 11 பதக்கங்களை பெற்றுள்ளனர்.

மேற்சொன்ன பதக்கங்களை பெற்ற காவல்துறையினரை நேற்று தூத்துக்குடி மாவட்ட எஸ்.பி. அலுவலகத்தில் வைத்து மாவட்ட எஸ்.பி. ஆல்பர்ட ஜான் பாராட்டி மென்மேலும் பதக்கங்கள் பெற வாழ்த்தினார்.

## பிளஸ் 2 மாணவனுக்கு அரிவாள் வெட்டு; அக்காளுடன் பழகுவதை கைவிடாததால் 10ம் வகுப்பு மாணவன் வெறிச்செயல் நெல்லையில் பயங்கரம்

திருநெல்வேலி ஆக.7

திருநெல்வேலி மாவட்டம், சேரன்மாதேவி அருகே உள்ள ஒரு கிராமத்தை சேர்ந்த 17 வயது சிறுவன், அதே பகுதியில் உள்ள ஒரு அரசு பள்ளியில் பிளஸ்2 படித்து வருகிறான். அதே ஊரைச்சேர்ந்த 17 வயது மாணவி ஒருவரும் இந்த மாணவனுடன் ஒரே வகுப்பில் படித்து வருகின்றனர். இதனால் இருவரும் நெருங்கி பழகி வந்ததாக கூறப்படுகிறது.

வகுப்பு முடிந்து வீட்டுக்கு சென்றபிறகும் அந்த மாணவர் செல்போனில் மாணவியுடன் மணிக்கணக்கில் பேசுவாராம். இந்த விவகாரம் அதே பள்ளியில் 10ம் வகுப்பு படிக்கும் அந்த மாணவியின் 15 வயதான தம்பிக்கு தெரிய வந்தது. இதனால் ஆத்திரமடைந்த சிறுவன் தனது அக்காவுடன் பேசுவதை நிறுத்துமாறு அந்த பிளஸ்2 மாணவரிடம் அடிக்கடி மிரட்டும் வகையில் கூறியுள்ளார். ஆனால் அந்த பிளஸ்2 மாணவர் அதை பொருட்படுத்தாமல் தொடர்ந்து பழகி வந்தார்.

இதனால் ஆத்திரமடைந்த மாணவியின் தம்பி, அக்காவுடன் பழகும் பிளஸ்2 மாணவரை தாக்குவதற்கு திட்டமிட்டார். இதுகுறித்து தனது வகுப்பில் படிக்கும் நண்பரான 15 வயது சிறுவனிடம் கூறியுள்ளார். பின்னர் இருவரும் சேர்ந்து அதேபகுதியில் வசிக்கும் பள்ளிப்படிப்பை பாதியில் நிறுத்திய 17 வயது சிறுவர்கள் 3 பேரிடம் சென்று பேசி திட்டமிட்டுள்ளனர். அதனடிப்படையில் நேற்று முன்தினம் இரவில் மாணவியின் தம்பி உள்பட 5 சிறுவர்களும் சேர்ந்து அந்த பிளஸ்2 மாணவரின் வீட்டுக்குச் சென்றனர்.


அங்கு அந்த மாணவரை சந்தித்து, உங்களுடன் பேசவேண்டும், என்னோடு வாருங்கள் என்று கூறினர். இதனை ஏற்று பிளஸ்2 மாணவரும் 5 சிறுவர்கள் உடன் சென்றுள்ளார். அப்போது தெருவின் ஓரத்தில் ஆள்நடமாட்டமில்லாத பகுதிக்கு பிளஸ்2 மாணவரை அவர்கள் அழைத்து சென்றனர். பின்னர் சற்றும் தாமதிக்காமல் மாணவியின் தம்பி மறைத்து வைத்திருந்த அரிவாளை எடுத்து பிளஸ் 2 மாணவரை வெட்டினான். இதில் அவரது கையில் வெட்டுக்காயம் ஏற்பட்டது.

இதை எதிர்பாராத பிளஸ்2 மாணவன் படுகாயத்துடன் அலறினான். உடனே 5 சிறுவர்களும் அங்கிருந்து தப்பி ஓடினர். இதில் படுகாயமடைந்த பிளஸ்2 மாணவர் மீட்கப்பட்டு சேரன்மாதேவியில் உள்ள அரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டான். அங்கு முதலுதவி சிகிச்சை அளிக்கப்பட்டு மேல்சிகிச்சைக்காக நெல்லை அரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளான். அங்கு மாணவனுக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

இதுகுறித்து பிளஸ்2 மாணவரின் பெற்றோர் அளித்த புகாரின்பேரில் சேரன்மாதேவி போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தினர். பிளஸ்2 மாணவனை வெட்டிவிட்டு தப்பி ஓடிய மாணவியின் தம்பி உள்பட 5 சிறுவர்களையும் போலீசார் நேற்று அதிரடியாக கைது செய்தனர்.

பின்னர் அவர்களை சேரன்மாதேவி கோர்ட்டில் ஆஜர்படுத்திவிட்டு சிறுவர் கூர்நோக்கு இல்லத்தில் அடைத்தனர். அக்காவுடன் பழகுவதை கைவிடாததால் பிளஸ்2 மாணவரை, மாணவியின் தம்பி உள்பட 5 சிறுவர்கள் வெட்டிய சம்பவம் அந்த பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

## மருத்துவக்கல்லூரி மாணவி தூக்குப்போட்டு தற்கொலை: பணிச்சுமை காரணமா..? வெளியான தகவல்



சென்னை ஆக.7

திருவள்ளூர் மாவட்டத்தை சேர்ந்தவர் ரவி (வயது 59). இவர் திருவள்ளூர் கோர்ட்டில் வக்கீல் தொழில் செய்து வருகிறார். இவருக்கு மகன், 3 மகள்கள் உள்ளனர். இவரது 3வது மகள் திவ்யா (26) வேலூர் அரசு மருத்துவக் கல்லூரியில் இளங்கலை மருத்துவம் பயின்றார்.

பின்னர், முதுகலை மருத்துவ படிப்புக்காக கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவக் கல்லூரியில் சேர்ந்து பொது மருத்துவம் 2ம் ஆண்டு படித்து வந்தார். திவ்யா அலைச்சல் மிகுதியால் டி.பி.சத்திரம் பகுதியில் வாடகைக்கு தனியாக அறை எடுத்து மருத்துவக் கல்லூரிக்கு சென்று வந்தார்.

அப்போது உடன்பயிலும் தட்சணாமூர்த்தி என்பவருடன் காதல் மலர்ந்துள்ளது. இந்த விஷயம் பெற்றோருக்கு தெரியவர, முதலில் திருமணத்துக்கு சம்மதிக்கவில்லை என்று தெரிகிறது. பின்னர் இரு குடும்பத்தாரும் கலந்து பேசி, படிப்பு முடிந்ததும் இருவருக்கும் திருமணம் நடத்தி வைப்பதாக தெரிவித்தனர்.

முதுகலை மருத்துவக்கல்லூரி மாணவர்கள் செயல்முறை வகுப்புக்காக ஆஸ்பத்திரிகளுக்கு பணிக்காக செல்வது வழக்கம்.

இந்த வகையில் திவ்யாவும் நேற்று முன்தினம் கீழ்ப்பாக்கம் அரசு ஆஸ்பத்திரிக்கு சென்றுள்ளார்.

பின்னர் மதியம் 2 மணிக்கு தனது அறைக்கு சென்றுள்ளார். அங்கு இரவு உணவு ஆர்டர் செய்து சாப்பிட்டதாகவும் தெரிகிறது.

இந்த நிலையில், நேற்று காலை தட்சணாமூர்த்தி திவ்யாவை செல்போனில் தொடர்பு கொண்டார். திவ்யா அழைப்பை எடுக்காததால் சந்தேகமடைந்த அவர், உடனடியாக அவரது நண்பருடன் அறைக்கு சென்று பார்த்தபோது அறை உட்புறமாக பூட்டப்பட்டிருந்தது. பின்னர் அறையை உடைத்து உள்ளே சென்று பார்த்த போது திவ்யா ஜன்னல் கம்பியில் தூக்கில் தொங்கியபடி கிடந்தார்.

இதைப்பார்த்து பதறிய தட்சணாமூர்த்தியும், அவரது நண்பரும் டி.பி.சத்திரம் போலீசாருக்கு தகவல் கொடுத்தனர். தகவலின் பேரில் அங்கு விரைந்த போலீசார் திவ்யாவின் உடலை மீட்டு பிரேத பரிசோதனைக்காக கீழ்ப்பாக்கம் அரசு ஆஸ்பத்திரிக்கு அனுப்பிவைத்தனர். தொடர்ந்து கைரேகை நிபுணர்கள் அந்த அறையை முழுவதுமாக ஆய்வு செய்தனர். கடிதம் எதுவும் சிக்கவில்லை. எனவே, செல்போன் தரவுகளை அடிப்படையாக கொண்டு போலீசார் விசாரித்து வருகிறார்கள்.

இதுகுறித்து அவரது உறவினர்கள் தெரிவிக்கையில், 'அதிகப்படியான பணிச்சுமை காரணமாகவே திவ்யா தற்கொலை செய்தார்' என்று குற்றம் சாட்டினர்.

இந்நிலையில் இதுதொடர்பாக கீழ்ப்பாக்கம் அரசு ஆஸ்பத்திரி நிர்வாகம் கூறுகையில், 'இது போன்று எந்த சம்பவங்களும் எங்கள் மருத்துவமனையில் நடைபெறாது. மாணவர்களில் நலனை மட்டுமே நாங்கள் விரும்புகிறோம்' என்றனர்.

இந்த சம்பவம் குறித்து கேள்விபட்டு உடன்பயிலும் மாணவர்கள் பிணவறை அருகே திரண்டு வந்து கதறி அழுதது பெரும் சோகத்தை ஏற்படுத்தியது. இதனைத்தொடர்ந்து கீழ்ப்பாக்கம் துணை கமிஷனர், திவ்யாவின் பெற்றோரைசந்தித்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஆறுதல் தெரிவித்தார்.

## உயர்கல்விக்கு ஒதுக்கப்படும் நிதியை உலக நாடுகளுக்கு இணையாக இந்தியா அதிகரிக்க வேண்டும்: விஐடி வேந்தர் கோ.விசுவநாதன்




ஈரோடு, ஆக 7

உயர்கல்விக்கு ஒதுக்கப்படும் நிதியை உலக நாடுகளுக்கு இணையாக இந்தியா அதிகரிக்க வேண்டும் என விஐடி பல்கலைக்கழக வேந்தர் கோ.விசுவநாதன் தெரிவித்தார்.

திங்கள்கிழமை மாலை நடைபெற்ற சிந்தனை அரங்க நிகழ்விற்கு நந்தா கல்வி நிறுவனங்களின் தலைவர் வி.சண்முகன் தலைமை வகித்தார். கோபி சார் ஆட்சியர் சி.சிவானந்தம் முன்னிலை வகித்தார். மக்கள் சிந்தனைப் பேரவைத் தலைவர் த.ஸ்டாலின் குணசேகரன் அறிமுகவுரையாற்றினார்.

இந்த விருதினை வழங்கி விஐடி வேந்தர் கோ.விசுவநாதன் பேசியதாவது: உயர் கல்வியில் இந்தியா பின்தங்கி இருக்கிறது. தமிழகம் 47 சதவீதம், ஆனால் தேசிய அளவில் 28 சதவீதம் தான் உள்ளது. வளர்ந்த நாடுகள் 60 சதவீதம் முதல் 100 சதவீதம் வரை உள்ளது. 35 ஆண்டுகளுக்கு முன்பு இந்தியா நாட்டின் அளவீட்டில் இருந்த சீனா இப்போது 60 சதவீதத்தை தாண்டிவிட்டது. 22 நாடுகளில் உயர் கல்வி வரை இலவசமாக கல்வி வழங்கப்படுகிறது. 40 நாடுகளில் தனியார் கல்லூரிகளில் படித்தாலும் 3 இல் ஒரு பங்கு செலவை அரசு ஏற்றுக்கொள்கிறது. இதுபோன்று ஊக்குவிப்பு இந்தியாவில் இல்லை. அதனால் தான் உயர்கல்வியில் பின்தங்கி இருக்கிறோம்.

விழாவில் சிறப்புரையாற்றிய ராணுவ விஞ்ஞானி முனைவர் வி.டில்லிபாபு பேசியதாவது:இந்தியாவில் டிஆர்டிஓ எனப்படும் பாதுகாப்பு மற்றும் மேம்பாட்டு நிறுவன 50 ஆய்வுக்கூடங்கள் மூலம் விமானங்கள், ஏவுகணை, போர்கப்பல், நீர்மூழ்கி கப்பல் மற்றும் தரை போர் வாகனங்கள் என பல்வேறு தொழில் நுட்பங்களை விஞ்ஞானிகள் உருவாக்கி வருகின்றனர்.

போர் விமான இயந்திரம் வடிவமைக்கும் தொழில் நுட்பம் உலகில் நான்கு நாடுகளில் மட்டும் உள்ளது. இன்னும் சில ஆண்டுகளில் இந்தியா ஐந்தாவது நாடாக அதில் இடம்பெறும். அந்த ஆராய்ச்சியில் ஈடுபடும் விஞ்ஞானிகள் குழுவில் தமிழகத்தைச் சார்ந்த நானும் இடம்பெற்றுள்ளேன்.

போர் விமானங்களில் பயணிக்கும் விமானிகள் சுவாசிக்க ஆக்சிஜன் உருளைகளை எடுத்துச் செல்ல முடியாத நிலையில் வளிமண்டலத்தில் உள்ள காற்றில் இருந்து ஆக்சிஜனை பிரித்து கொடுக்கும் கருவியை நாங்கள் உருவாக்கினோம். புதுமையான சிந்தனையால் இது சாத்தியமானது.

கரோனா காலத்தில் ஆக்சிஜன் பற்றாக்குறையைப் போக்க நாடு முழுவதும் 500 ஆக்சிஜன் தயாரிப்பு நிலையங்களை டிஆர்டிஏ ஏற்படுத்திக் கொடுத்தது.

எனவே உங்கள் அறிவு ஆராய்ச்சிக் கட்டுரையோடு சுருங்கி விடக்கூடாது. எதையும் புதுமையாக யோசிக்க பழகுங்கள். படிப்பு என்பது பாடத்திட்டம் சார்ந்தது. வாசிப்பு என்பது அதைத் தாண்டி, நமது எதிர்காலத்திற்கு உதவக்கூடியது. படிப்பு வேலை, ஊதியம் தரும். ஆனால் வாசிப்பு வாழ்க்கை தரும். புத்தகங்கள் தான் என்னை வளர்த்தன. புத்தகங்கள் தான் என்னை கைபிடித்து வழிநடத்தின.

அப்துல் கலாமின் அக்னி சிறகுகள் புத்தகம் தான் என்னை விஞ்ஞனிகளுக்கான நுழைவுத்தேர்வை எழுத வைத்து, தமிழகத்தில் தேர்வான ஏழு பேரில் ஒருவராக மாற்றியது.

பாதுகாப்பு மற்றும் விண்வெளி தொடர்பாக உருவாக்கப்பட்டுள்ள பாதுகாப்பு தொழில்நுட்ப தடம் மூலம் ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உள்ளிட்ட பல துறைகளில் வாய்ப்புகள் கிடைக்கும். தமிழகத்தில் சென்னை, திருச்சி, சேலம், ஒசூர், கோவை ஆகிய நகரங்களை ஒருங்கிணைது பாதுகாப்பு தொழில்துறை தடம் உருவாக்கப்பட்டுள்ளது. இதற்கென உருவாக்கப்பட்டுள்ள 69 நிறுவனங்களில் கடந்த பிப்ரவரி வரை ரூ. 4.700 கோடி முதலீடு செய்யப்பட்டுள்ளது. எனவே, நமக்கான வாய்ப்புகள் மேலும் அதிகரிக்கும்.

## கம்பம் ஒக்கலிகர் மண்டபத்தில் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம்




கம்பம்,ஆக7

தேனி மாவட்டம் கம்பம் நகராட்சியில் 13 மற்றும் 14 வது வார்டுகளுக்குட்பட்ட பகுதிகளுக்கு உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம் ஒக்கலிகர் திருமண மண்டபத்தில் சட்டமன்ற உறுப்பினர் இராமகிருஷ்ணன் தலைமையில் நகராட்சி ஆணையாளர் உமா சங்கர், நகர் மன்ற தலைவர் வனிதா நெப்போலியன், வடக்கு நகர் கழக செயலாளர் வீரபாண்டியன், தெற்கு நகர் கழக பொறுப்பாளர் பால்பாண்டிராஜா ஆகியோர் முன்னிலையில் நேற்று நடைபெற்றது.

இம்முகாமில் பல்வேறு துறைகளை சேர்ந்த அதிகாரிகள் கலந்து கொண்டு பொதுமக்களின் கோரிக்கைக்களுக்கான மனுக்களை பெற்றுக்கொண்டு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இதில் ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டு பயனடைந்தனர்.

## குளித்தலை வருவாய் வட்டாட்சியர் வளாகத்தில் கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம்



கரூர், ஆக 7

கரூர் மாவட்டம், குளித்தலை வருவாய் வட்டாட்சியர் வளாகத்தில் தமிழ்நாடு கிராம நிர்வாக அலுவலர்கள் தங்களின் வாழ்வாதார கோரிக்கைகளை வலியுறுத்தி கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம். நடைபெற்றது

கிராம நிர்வாக அலுவலர்களின் நீண்ட நாள் கோரிக்கையான கல்விதகுதியை பட்டப்படிப்பாக உயர்த்தக்கோரியும்., பத்தாண்டு பணி முடித்த கிராம நிர்வாக அலுவலர்களுக்கு தேர்வு நிலை கிராம நிர்வாக அலுவலர்கள் எனவும், இருபதாண்டு பணி முடித்த கிராம நிர்வாக அலுவலர்களுக்கு சிறப்பு நிலை கிராம நிர்வாக அலுவலர்கள் எனவும் பெயர் மாற்றம் செய்து அரசாணை வழங்கியும், அதற்கேற்ப ஊதியம் வழங்க வலியுறுத்தியும்., வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அரசு முதன்மை செயலாளர் கடித (நிலை) எண்.07ஃநி.அ.2(2)2019 நாள் 03.01.2019ன் படி கிராம நிர்வாக அலுவலர்களுக்கு வுளுடுசு பட்டா மாறுதல் பரிந்துரை பெற உத்தரவு பிறப்பிக்கப்பட்டும், இதுவரை நடைமுறைப்படுத்தாமல் இருப்பதை உடனடியாக செயல்படுத்தக்கோரியும்., இந்த கவனரூடவ்ர்ப்பு ஆர்ப்பாட்டம் கிராம நிர்வாக அலுவலர்கள் சங்க குளித்தலை வட்டாரத்தலைவர் தீபக்குமார் தலைமையில் நடைபெற்றது. மாவட்ட துணைத்தலைவர் முத்துக்குமார் முன்னிலை வகித்தார். இறுதியில் சதீஸ் நன்றி உரை கூறினார்

## தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு சீர்குலைவு நயினார் நாகேந்திரன் குற்றச்சாட்டு




ஸ்ரீவில்லிபுத்தூர். ஆக.7

ஸ்ரீவில்லிபுத்தூரில் பாரதிய ஜனதா கட்சியின் சார்பில் பூத்து கமிட்டி கூட்டம் நடைபெற்றது இந்த கூட்டத்திற்கு விருதுநகர் மேற்கு மாவட்ட தலைவர் சரவணதுரைராஜா தலைமை தாங்கினார். தமிழக பாரதிய ஜனதா கட்சியின் மாநில தலைவர் நயினார் நாகேந்திரன் கலந்துகொண்டு பேசினார் பின்பு பூத் கமிட்டி செயல்பாடுகள் உறுப்பினர் சேர்க்கை குறித்து கட்சி நிர்வாகிகளிடம் ஆலோசனை நடத்தினார் அதன்பிறகு நிருபர்களுக்கு அளித்த பேட்டியின்போது கூறியதாவது தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு சீர்கெட்டு விட்டது தினந்தோறும் கொலை கொள்ளை அதிகரித்து உள்ளது நேற்று இரவு ரோந்து பணிக்கு சென்ற சப் இன்ஸ்பெக்டர் வெட்டி கொலை செய்யப்பட்டுள்ளார் போலீஸ் நிலையத்தில் லாக்கப் சாவுகள் அதிகரித்து உள்ளது தொடர்ந்து வழிப்பறி சம்பவங்களும் அதிகரித்து உள்ளன..

2026 தேர்தலில் திமுக அரசு அகற்றப்படும். தமிழகத்தில் சொத்து வரி உயர்வு மின்சார வரி உயர்வு அதிகரித்து உள்ளது மக்கள் பெரும் அவதிக்குள்ளாகி வருகின்றனர் என்று கூறினார். உடன் மாநில துணைத்தலைவர் கோபால்சாமி எம் எல் ஏ மாநில பொது செயலாளர் பொன் பாலகணபதி மற்றும் நகர ஒன்றிய நிர்வாகிகள் ஏராளமான கலந்துகொண்டனர்

## திருப்பூர் மாவட்டம் தாராபுரம் அரசு மேல்நிலை பள்ளியில் படிக்கும் கபடி விளையாட்டு வீரர்களுக்கு காவல் ஆய்வாளர் முத்துகுமார் இலவசமாக கபடி சீருடை வழங்கல்

திருப்பூர் மாவட்டம் தாராபுரம் அரசு மேல்நிலை பள்ளியில் படிக்கும் கபடி விளையாட்டு வீரர்களுக்கு காவல் ஆய்வாளர் உயர் திரு முத்துகுமார் அவர்கள் இலவசமாக கபடி சீருடை வழங்கினார். தாராபுரம் தலைமை காவலர் கலைச்செல்வன் மாணவர்களுக்கு ஊக்கமளிக்கும் வகையில் பல்வேறு கருத்துக்களை கூறினார். மாணவர்கள் தவறான போதை பழக்கத்தில் இடுபட கூடாது என்று உறுதிமொழி எடுத்து கொண்டனர். உடன்தா ராபுரம் கபாடி கழகம்து றையன், சமூக ஆர்வலர் சிவசங்கர், கொளரி சித்ரா முருகேஷ், லட்சுமணன், அருள்தாஸ், முருகேஷ், மணகடவு ரவி, பகுஜன் சமாஜ் கட்சி மாவட்ட செயலாளர் அலாவுதின், தமிழ் புலிகள் கட்சி தாராபுரம் நகர செயலாளர் தெண்டபாணி, வழக்கறிஞர் திருநாவுகரசு, சதா உள்பட பலர் உள்ளனர்.

தினகனி

Namadhu dhina kani daily morning newspaper
Press register general of India
PRGI NO TNTAM/2023/88253

7.8.2025

# மேலூர் மில்கேட்டில் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம்: 664 மனுக்கள் பொதுமக்களிடம் பெறப்பட்டன



மேலூர்.ஆக 7

பொதுமக்கள் அன்றாடம் அணுகும் அரசு துறைகளில் சேவை திட்டங்களை அவர்களது இல்லங்களுக்கு சென்று வழங்கும் உங்களுடன் ஸ்டாலின் என்னும் இந்த புதிய திட்டம் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்தார். அதில் ஒரு பகுதியாக மதுரை மாவட்டம், மேலூர் நகராட்சிக்கு உட்பட்ட 26, 27, வது வார்டுகளை சேர்ந்த மில்கேட், ஆகிய பொதுமக்களுக்கு மில்கேட்டில் உள்ள நகராட்சி சமுதாய கூடத்தில் முகாம் நடைபெற்றது. உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமில் மகளிர் உரிமை தொகைக்கு 337 பேரும், 152 பேர் மருத்துவ பரிசோதனை செய்தனர். இதர மனுக்கள் 175, மொத்தம் 664 மனுக்கள் பொதுமக்களிடம் இருந்து பெறப்பட்டன. இம்முகாமில் மதுரை மாவட்ட வருவாய் அலுவலர் க. அன்பழகன், மேலூர் வருவாய் கோட்டாட்சியர் சங்கீதா, மேலூர் நகர் மன்ற தலைவர் முகமது யாசின், நகராட்சி ஆணையாளர் கிருஷ்ணவேணி, மேலூர் வட்டாட்சியர் செந்தாமரை, மேலூர் சமூக பாதுகாப்பு திட்ட தாசில்தார் லயனல் ராஜ்குமார், நகராட்சி துணைத் தலைவர் இளஞ்செழியன், நகராட்சி பொறியாளர் முத்துக்குமார், 26வது வார்டு நகர் மன்ற உறுப்பினர் கலைச்செல்வி செந்தில்குமார், 27 வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் வசந்தா ராஜா, அனைத்து துறை சார்ந்த அதிகாரிகள், நகராட்சி பணியாளர்கள், பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.



நாகை மாவட்டம் திருப்பூண்டி மேற்கு ஊராட்சியில் உள்ள திருப்பூண்டி அரசு மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமினை கீழையூர் கிழக்கு ஒன்றிய திமுக செயலாளர் வேளாங்கண்ணி பேரூராட்சி துணைத் தலைவருமான தாமஸ் ஆல்வா எடிசன் நேரில் சென்று பார்வையிட்டார்

# தமிழக மீனவர்கள் 14 பேர் கைது: இலங்கை கடற்படை மீண்டும் அராஜகம்

சென்னை, ஆக. 7

தமிழகம் மற்றும் புதுவையை சேர்ந்த மீனவர்கள் எல்லை தாண்டி மீன் பிடிப்பதாகக் கூறி இலங்கை கடற்படையால் கைது செய்யப்படும் சம்பவம் தொடர்ந்து நிகழ்ந்து வருகிறது. அதோடு மீனவர்களின் விசைப் படகுகளைப் பறிமுதல் செய்து அரசுடைமையாக்குவது போன்ற நடவடிக்கைகளையும் இலங்கை அரசு மேற்கொண்டு வருகிறது.

இதனால் மீனவர்களின் வாழ்வாதாரம் வெகுவாக பாதிக்கப்படும் சூழலும் நிலவி வருகிறது. இந்த துயரச் சம்பவங்களுக்கு இடையே தமிழக மீனவர்கள் மீது இலங்கை கடற்கொள்ளையர்களும் அவ்வப்போது தாக்குதல் நடத்தி வருகின்றனர். இலங்கை கடற்படையினரால் சிறைபிடிக்கப்பட்ட தமிழக மீனவர்களையும், அவர்களது மீன்பிடிப் படகுகளையும் விடுவித்திடவும் வலியுறுத்தி தமிழக முதல்அமைச்சர் மு.க. ஸ்டாலின், பிரதமர் மோடி மற்றும் மத்திய வெளியுறவுத் துறை மந்திரி ஜெய்சங்கருக்கு தொடர்ந்து கடிதம் எழுதி வருகிறார்.

இதற்கிடையே கைது செய்யப்படும் தமிழக மீனவர்களுக்கு அபராதம் விதிக்கப்படும் நிகழ்வுகளும், மீனவர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்துவது, தாக்குதல் நடத்துவது போன்ற சம்பவங்களும் அரங்கேறி வருகின்றன. இந்நிலையில் பாம்பன் தெற்கு மீன்பிடி துறைமுகத்திலிருந்து மீன்பிடிக்கச் சென்ற 10 பேர் உள்பட 14 தமிழக மீனவர்களை படகுடன் இலங்கை கடற்படை சிறைபிடித்தது. கற்பிட்டி கடற்பரப்பில் வைத்து எல்லை தாண்டி மீன்பிடித்ததாக மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். இதனைத்தொடர்ந்து விசாரணைக்காக புத்தளம் கடற்படை முகாமிற்கு மீனவர்களை அழைத்துச் சென்றுள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

# தார் ஆலைக்கு சீல்



நீலகிரி மாவட்டம் கூடலூர் அருகே உள்ள தேவாலப் பகுதியில் கடந்த வாரம் PRCC தார் கலவை ஆலையின் சுற்று சுவர் இடிந்து பல வீடுகளுக்குபெருத்த சேதம் ஏற்பட்டதை தொடர்ந்து தேவாலா மக்களின் நீண்ட கால கோரிக்கையை ஏற்று அபாயகரமான பாதுகாப்பு குறைபாடு மற்றும் விதிமீறல் உள்ளிட்ட பல காரணங்களை சுட்டிக்காட்டி தேவாலாவில் சட்ட விரோதமாக இயங்கி வந்த PRCC தார் கலவை ஆலையை அதிகாரிகள் சீல் வைத்தனர். இப்பகுதி மக்களின் இந்த பல ஆண்டு கால வாழும் உரிமைக்கான போராட்டத்திற்கு உறுதுணையாக இருந்த கூடலூர் சட்ட மன்ற உறுப்பினர் பொன் ஜெயசீலன், முன்னாள் சட்ட மன்ற உறுப்பினர் திராவிடமணி மற்றும் அனைத்து கட்சி பிரதிநிதிகளுக்கும், அனைத்து சமூக நல அமைப்புகளுக்கும், அனைத்து வியாபார சங்கங்களுக்கும் வியாபாரிகளுக்கும், அனைத்து ஓட்டுநர் நண்பர்களுக்கும், அனைத்து சமூக நல ஆர்வலர்களுக்கும், தேவாலா பி ஆர் சி சி ஆலை எதிர்ப்பு போராட்டக் குழுவினர் சார்பில் நன்றி தெரிவித்துக் கொள்வதாக தெரிவித்துள்ளனர்.

# இன்றைய ராசி பலன்கள் (7.8.2025)

**மேஷம்:** முயற்சிகளில் வெற்றி காணலாம். வேலை இடத்தில் சாதனை. குடும்பத்தில் சந்தோஷம் பெருகும்.

**ரிஷபம்:** பண விஷயங்களில் சிறிய கவனக்குறைவு ஏற்படலாம். புதிய ஒப்பந்தங்களில் சிந்தித்து செயல் படுங்கள்.

**மிதுனம்:** முன்னேற்றத்திற்கு வழிவகுக்கும் சந்திப்பு நடக்கலாம். நண்பர்களிடம் உதவி கிடைக்கும். உடல் நலம் மேம்படும்.

**கடகம்:** வீட்டில் சில மன அழுத்தங்கள் இருந்தாலும், பிற்பகலில் நிலைமை சீராகும். பணத்தில் முன்னேற்றம்.

**சிம்மம்:** முக்கிய முடிவுகளை இன்று எடுக்க வேண்டாம். பேச்சு வாதங்களில் சிக்கல் ஏற்படலாம். சாந்தமாக இருங்கள்..

**கன்னி:** தொழிலில்நன்மைகிடைக்கும். குடும்பத்தில் அனந்த சாந்தி நிலவும். நீண்ட நாட்களாக இருந்த மனஉற்சாகம்திரும்பும்.

**துலாம்:** திடீர் பயணங்கள் ஏற்படலாம். நண்பர் ஒருவரிடம் இருந்து முக்கிய தகவல் கிடைக்கும். பணம் வரவு திருப்திகரமாக இருக்கும்.

**விருச்சிகம்:** உணர்வுகள் மேலோங்கி பேச வேண்டாம். வாக்குவாதங்களில் எச்சரிக்கையாக இருங்கள். புதிய முயற்சிகள் தேவை..

**தனுசு:** வெற்றி நிச்சயம்! தொழிலில் புதிய வாய்ப்பு தேடி வரும். வீண் செலவுகளைதவிர்க்கவேண்டும்.

**மகரம்:** கடன் அல்லது சட்ட சம்பந்தமான விஷயங்களில் சிக்கல் வந்தாலும் தீர்வு காணப்படும். குடும்ப ஒற்றுமை உண்டு.

**கும்பம்:** முடிவெடுக்கும் பொழுது பிறரது ஆலோசனையை கேளுங்கள். கணவன்மனைவி இடையே சிறிய மோதல் தோன்றலாம்.

**மீனம்:** சிறந்த நாள். தொழிலில் வளர்ச்சி. உத்தியோகத்தில் பதவி உயர்வு வரும் வாய்ப்பு உண்டு. மதிப்பும் மரியாதையும் கூடும்.

# நடப்பாண்டு முதல் அண்ணா பல்கலைக்கழக மாணவர்களுக்கு வெளிநாட்டு மொழி, தொழில்சார்ந்த படிப்புகள் கட்டாயம்

என்ஜினீயரிங் படிப்புகளில் சேருவதற்கான கலந்தாய்வு தொடங்கி நடைபெற்று வருகிறது. அண்ணா பல்கலைக்கழகத்தின் கீழ் வரும் 300 என்ஜினீயரிங் இணைப்பு கல்லூரிகளில் பி.இ., பி.டெக். படிப்புகளுக்கான கல்வி விதிமுறைகள்2025ஐ அண்ணா பல்கலைக்கழக கல்வி கவுன்சில் சமீபத்தில் அங்கீகரித்து இருக்கிறது. இந்த புதிய கல்வி விதிமுறைகள் நடப்பு கல்வியாண்டில் இருந்து முதல் 2 செமஸ்டர்களுக்கு செயல்படுத்தப்பட உள்ளன. புதிய விதிமுறைகளின்படி, நடப்பாண்டில் என்ஜினீயரிங் கல்லூரிகளில் சேர இருக்கும் அனைத்து பி.இ., பி.டெக். மாணவர்களுக்கும் வெளிநாட்டு மொழி, வாழ்க்கைத் திறன்கள் மற்றும் தொழில் சார்ந்த படிப்புகள் கட்டாயமாக்கப்பட்டு இருக்கின்றன. தன்னாட்சி அதிகாரம் (அடானமஸ் கல்லூரிகள்) பெற்ற கல்லூரிகள் ஏற்கனவே வெளிநாட்டு மொழி படிப்புகளை வழங்கி வரும் சூழலில், அண்ணா பல்கலைக்கழகம் தற்போது இணைப்பு கல்லூரிகளுக்கு இதை கட்டாயமாக்கியுள்ளது குறிப்பிடத்தக்கது. அந்தவகையில், நடப்பாண்டில் என்ஜினீயரிங் மாணவர்கள் ஒவ்வொருவரும் தங்களுடைய 2வது செமஸ்டரில் ஜெர்மன், ஜப்பான், கொரியன் மற்றும் டச்சு ஆகிய வெளிநாட்டு மொழிகளில் ஏதாவது ஒன்றை கட்டாயம் படிக்க வேண்டும். மேலும் புதிய விதிமுறைகள் பி.இ., பி.டெக். படிப்புகளின் முதல் 2 செமஸ்டர்களில் காப்புரிமை தாக்கல், தொழில்பாதுகாப்பு விதிமுறைகள், வெல்டிங் செயல்முறைகள், மின்னணு கூறுகள் போன்ற வாழ்க்கைத் திறன் படிப்புகளையும் அறிமுகப்படுத்தி இருக்கிறது. இதுமட்டுமல்லாமல், இந்த புதிய விதிமுறைகளின் அடிப்படையில், அண்ணா பல்கலைக்கழக இணைப்பு கல்லூரிகள் 2 தொழில் சார்ந்த படிப்புகளை வழங்க அனுமதிக்கின்றன. இந்த படிப்புகள் ஒவ்வொரு செமஸ்டரிலும் 15 மணி நேரம் கற்பிக்கக்கூடிய ஒரு 'கிரெடிட் பேஸ்' படிப்புகளாக இருக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து 3வது செமஸ்டர் முதல் 5வது செமஸ்டர் வரையில் தமிழ்நாடு அரசின் நான் முதல்வன் திட்டத்தின் கீழ் திறன் மேம்பாட்டு படிப்புகளை கல்லூரிகள் வழங்கலாம் எனவும், மாணவர்கள் எந்த ஒரு ஆன்லைன் படிப்புகளை தொடரலாம் எனவும் இந்த புதிய விதிமுறைகள் அனுமதி அளிக்கின்றன.

# வெளியாகும் அனுஷ்காவின் "காதி" டிரெய்லர்




'அருந்ததி' என்ற பேய் படத்தில் நடித்து பிரபலமானவர் அனுஷ்கா ஷெட்டி. இவரின் சினிமா வாழ்க்கையில் 'பாகுபலி' முக்கிய படமாக அமைந்தது. தமிழ், தெலுங்கு, மலையாளம் உள்ளிட்ட மொழிகளில் முன்னணி நடிகையாக வலம் வந்த இவரது நடிப்பில் கடைசியாக வெளியான படம் 'மிஸ் ஷெட்டி மிஸ்டர் பொலிஷெட்டி'.

தற்போது இவர்கிரிஷ்ஜாகர்லமுடி இயக்கத்தில்தனது 50வது படமான "காதி" என்ற படத்தில்நடித்து முடித்துள்ளார். இதில் விக்ரம் பிரபு முக்கிய கதாபாத்திரத்தில்நடித்துள்ளார். இப்படம் போதைப்பொருள்கடத்தலை மையமாக வைத்து உருவாகியுள்ளது. தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் மற்றும் இந்தி மொழிகளில் ஏப்ரல் மாதம் 18ந் தேதி வெளியாகும் என படக்குழு அறிவித்திருந்தது. ஒரு சில காரணத்தால் அந்த தேதியில் படம் வெளியாகவில்லை. இப்படம் ஆகஸ்ட் இறுதிக்குள் வெளியாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த நிலையில், காதி படத்தின் டிரெய்லர் நாளை மாலை 4.45 மணிக்கு வெளியாகும் என படக்குழு அறிவித்துள்ளது.

# சினிமாவில் 'ரீ என்ட்ரி'...பூஜையுடன் துவங்கிய அப்பாஸின் புதிய படம்



அறிமுக இயக்குனர் மரியராஜா இளஞ்செழியன் இயக்கும் இந்தப்படத்தின்மூலம் 10 வருடங்களுக்கு பிறகு அப்பாஸ் சினிமாவில் 'ரீ என்ட்ரி' கொடுத்துள்ளார். ஜி.வி. பிரகாஷ் மற்றும் கவுரி பிரியா ஆகியோர் இப்படத்தில் முக்கிய கதாபாத்திரங்களில் நடிக்கின்றனர்.

பியாண்ட் பிக்சர்ஸ் மூலம் ஜெயவர்த்தனன் தயாரிக்கும் இப்படம் முழுமையான பொழுது போக்கு படமாக இருக்கும் என்று கூறப்படுகிறது. இப்படத்திற்கு ஜஸ்டின் பிரபாகரன் இசையமைக்கிறார்.

# விஜய் சேதுபதி நடித்த "முத்து என்கிற காட்டான்" வெப்தொடர்




விஜய் சேதுபதி நடிப்பில் அண்மையில் தலைவன் தலைவி திரைப்படம் வெளியாகி மக்களிடையே நல்ல வரவேற்பை பெற்றது. இப்படத்தை பாண்டிராஜ் இயக்க நித்யா மேனன் மற்றும் யோகி பாபு முக்கிய கதாப்பாத்திரத்தில் நடித்து இருந்தனர். இத்திரைப்படம் முதல் 6 நாள்களில் ரூ. 50 கோடிக்கும் அதிகமாக வசூலித்துள்ளதாகத் தயாரிப்பு நிறுவனம் அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளது.

இந்நிலையில் விஜய் சேதுபதி அடுத்ததாக முத்து என்கிற காட்டான் என்ற வெப் தொடரில் நடித்துள்ளார். இத்தொடரை மணிகண்டன் இயக்கியுள்ளார். இவர் இதற்கு முன் காக்கா முட்டை மற்றும் கடைசி விவாசாயி போன்ற மாபெரும் படைப்பை உருவாக்கிய இயக்குநர் ஆவார். இத்தொடரை விஜய் சேதுபதி தயாரித்துள்ளார்.

இத்தொடரில் விஜய் சேதுபதி மற்றும் ஜாக்கி ஷெராப் முக்கிய கதாப்பாத்திரத்தில் நடித்துள்ளனர். இத்தொடர் விரைவில் ஜியோ ஹாட்ஸ்டார் ஓடிடி தளத்தில் வெளியாக இருக்கிறது.

# அமலாக்கத்துறை அலுவலகத்தில் ஆஜரான நடிகர் விஜய் தேவரகொண்டா காரணம் என்ன?



சட்டவிரோத ஆன்லைன் சூதாட்ட செயலி விளம்பரங்களில் நடித்த விஜய் தேவரகொண்டா, பிரகஷ் ராஜ், ரானா டகுபதி உள்ளிட்ட நடிகர்கள், சமூகவலைதள பிரபலங்கள் உள்பட 29 பேர் மீது அமலாக்கத்துறை வழக்குப்பதிவு செய்துள்ளது.

சட்டவிரோத பணப்பரிமாற்றம் உள்பட பல்வேறு குற்றச்சாட்டுகள் அடிப்படையில் அமலாக்கத்துறை வழக்குப்பதிவு செய்துள்ளது. இந்த வழக்கு தொடர்பாக விசாரணைக்கு ஆஜராகும்படி பலருக்கும் அமலாக்கத்துறை நோட்டீஸ் அனுப்பியுள்ளது.

அந்த வகையில், விசாரணைக்கு 6ம் தேதி (இன்று) ஆஜராகும்படி நடிகர் விஜய் தேவரகொண்டாவுக்கும் அமலாக்கத்துறை நோட்டீஸ் அனுப்பியது.

இந்நிலையில், ஐதராபாத்தில் உள்ள அமலாக்கத்துறை அலுவலகத்தில் நடிகர் விஜய் தேவரகொண்டா இன்று ஆஜரானார்.

ஆன்லைன் சூதாட்ட செயலி விளம்பரத்தில் நடத்தது தொடர்பாக பதியப்பட்ட பணமோசடி வழக்கில் விஜய் தேவரகொண்டாவிடம் அமலாக்கத்துறை அதிகாரிகள் விசாரணை நடத்தி வருகின்றனர்.

முன்னதாக இதே வழக்கில் கடந்த 30ம் தேதி அமலாக்கத்துறை அலுவலகத்தில் நடிகர் பிரகாஷ் ராஜ் ஆஜரானார் என்பது குறிப்பிடத்தக்கது.

# இந்தியாஇங்கிலாந்து டெஸ்ட் தொடர்: இம்பேக்ட் பிளேயர் விருதை வென்ற ஆல் ரவுண்டர்




இங்கிலாந்து மற்றும் இந்திய அணிகளுக்கு இடையேயான 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரானது 22 என்ற கணக்கில் சமனில் முடிவடைந்துள்ளது. இதில் முதல் மற்றும் 3வது டெஸ்டில் இங்கிலாந்தும், இரண்டாவது டெஸ்டில் இந்திய அணியும் வெற்றி பெற்ற நிலையில் 4வது டெஸ்ட் டிரா ஆனது.

இதையடுத்து நடந்த 5வது டெஸ்டில் இந்திய அணி 6 ரன்கள் வித்தியாசத்தில்த்ரில்வெற்றியைப்பதிவுசெய்ததுடன்தொடரையும் சமன்செய்து அசத்தியது. இந்திய கிரிக்கெட் வாரியமான பி.சி.சி.ஐ ஒவ்வொரு தொடரின் முடிவிலும் அந்த தொடரில் அதிக அளவு தாக்கத்தை ஏற்படுத்திய வீரரை தேர்வு செய்து 'இம்பேக்ட் பிளேயர்' விருது வழங்கி கவுரவித்து வருகிறது.

அந்தவகையில், இந்தியாஇங்கிலாந்து டெஸ்ட் தொடரில் தாக்கத்தை ஏற்படுத்திய வீரர் விருது ஆல் ரவுண்டர் வாஷிங்டன் சுந்தருக்கு வழங்கப்பட்டுள்ளது. அந்த விருதை அணியின்தலைமைப் பயிற்சியாளர்கவுதம் கம்பீர், ஜடேஜா உள்ளிட்டோர் இணைந்து வாஷிங்டன் சுந்தருக்கு வழங்கினர்.

இந்தத் தொடரில் 284 ரன்கள் குவித்த வாஷிங்டன் சுந்தர், 7 விக்கெட்களையும் கைப்பற்றினார். மேலும் டிராவில் முடிந்த டெஸ்ட் போட்டியில் சதமும் விளாசினார் என்பது குறிப்பிடத்தக்கது.

# தி ஹண்ட்ரட் கிரிக்கெட் லீக்: லண்டன் ஸ்பிரிட் அணியை வீழ்த்திய ஓவல் இன்விசிபிள்ஸ்



இங்கிலாந்தில் தி ஹண்ட்ரட் கிரிக்கெட் லீக் (100 பந்துகள் கிரிக்கெட்) தொடர் நேற்று தொடங்கியது. இதில் நேற்று நடந்த முதல் போட்டியில் நடப்பு சாம்பியனான லண்டன் ஸ்பிரிட் அணியும், ஓவல் இன்வின்சிபிள்ஸ் அணியும் மோதின.

இந்த ஆட்டத்தில் முதலில் பேட்டிங் செய்த லண்டன் ஸ்பிரிட் அணி அணி 94 பந்துகளில் அனைத்து விக்கெட்டையும் இழந்து 80 ரன்னுக்கு ஆல் அவுட் ஆனது. லண்டன் ஸ்பிரிட் அணி தரப்பில் அதிகபட்சமாக ஆஷ்டன் டர்னர் 21 ரன் எடுத்தார். ஓவல் இன்விசிபிள்ஸ் தரப்பில் சாம் கர்ரன், ரஷித் கான் தலா 3 விக்கெட் வீழ்த்தினர்.

தொடர்ந்து 81 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் ஆடிய ஓவல் இன்விசிபிள்ஸ் அணி 69 பந்துகளில் 4 விக்கெட்டை இழந்து 81 ரன் எடுத்து 6 விக்கெட் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. ஓவல் இன்விசிபிள்ஸ் தரப்பில் அதிகபட்சமாக் வில் ஜேக்ஸ் 24 ரன் எடுத்தார்.

# நான் மகிழ்ச்சியாக இருக்கிறேன்: கம்பீர் பேட்டி

இந்தியா இங்கிலாந்து கிரிக்கெட் அணிகள் இடையிலான 5 ஆட்டங்கள் கொண்ட டெஸ்ட் தொடரின்கடைசி போட்டி லண்டன் ஓவலில் நடைபெற்றது. இதில் முதல் இன்னிங்சில் இந்தியா 224 ரன்களும், இங்கிலாந்து 247 ரன்களும் எடுத்தன. 23 ரன் பின்தங்கிய நிலையில் 2வது இன்னிங்சை ஆடிய இந்தியா 396 ரன்களுக்கு ஆட்டமிழந்தது. இதன் மூலம் இங்கிலாந்துக்கு 374 ரன்கள் வெற்றி இலக்காக நிர்ணயிக்கப்பட்டது.இமாலய இலக்கை நோக்கி 2வது இன்னிங்சை ஆடிய இங்கிலாந்து அணி 85.1 ஓவர்களில் 367 ரன்களுக்கு ஆல்அவுட் ஆனது. இதனால் இந்தியா 6 ரன் வித்தியாசத்தில் திரில் வெற்றியை ருசித்தது. இந்திய தரப்பில் முகமது சிராஜ் 5 விக்கெட்டும், பிரசித் கிருஷ்ணா 4 விக்கெட்டும் வீழ்த்தினர். இந்த வெற்றியின் மூலம் 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரை இந்தியா 22 என்ற கணக்கில் சமன் செய்தது. டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் வெளிநாட்டு மண்ணில் ஒரு தொடரின் 5வது போட்டியில் இந்தியா வெற்றி காண்பது இதுவே முதல் நிகழ்வாகும்.

இந்த நிலையில் , லண்டனில் இருந்து டெல்லி திரும்பிய இந்திய அணி தலைமை பயிற்சியாளர் கம்பீர் கூறியதாவது,

நான் மகிழ்ச்சியாக இருக்கிறேன். இந்த தொடரில் சிராஜ் புத்திசாலித்தனமாக இருந்திருக்கிறார் என்று நான்நினைக்கிறேன்.உண்மையில்,அவர்மட்டுமல்ல, முழு அணியும் அற்புதமாக செயல்பட்டிருக்கிறது . கடந்த இரண்டு மாதங்களாக வீரர்கள் சிறப்பாக செயல்பட்டுள்ளனர். சுப்மான் கில் கேப்டனாக அற்புதமான வேலையைச் செய்திருக்கிறார் . அவர் இந்தியகிரிக்கெட்டுக்கு தொடர்ந்துநல்லது செய்வார். என தெரிவித்தார்.

DHINA KANI
Canara Bank
Account: 120028528266
IFSC code: CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.